# இருக்கிறம்

மாதம் இருமுறை

K.S காத்திருப்பு 3 - இருக்கை 7 | ஒரு பொல்லாப்புமில்லை | 01-05-2009

ISSN 1800-3674



## கவி சொல்லும் கதை

## சிரித்திடும் சித்திரை

## முதுசொம்

## தடுப்பு முகாம்கள்

50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே ''இலங்கை ஆசிய நிலையம்'' உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

The Asia Foundation





சிரித்திடும் சித்திரை
08

கணவன் மனைவி
18





28
முதுசொம்

86
விரும்பாத போரின் வேண்டாத நினைவுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணக்கம் வாசகர்களே!

## உச்சி மீது

வானம் மனித முயற்சிகளின் முடிவெல்லையாய் கருதப் படுகிறது. அந்த வானமே சில சூழல்களில் எம் தலைமீது இடிந்து வீழ்வதும் உண்டு. எம் உணர்விருப்பின் அல்லது உயிர்ப்பின் உச்சிச் சிகரங்கள் சிதையும்படியாக அந்தப் பேர்வானமே வீழ்ந்தாலும், கலங்காத மனம் கொண்ட மனித வாழ்வே வாழத் தகுதி கொண்டது. 'தக்கனவே வாழ்கின்றன' அல்லது தப்பிப் பிழைக்கின்றன என்பதே எமக்கான விதி. நாம் வாழும் அல்லது இருக்கும் தகைமை கொண்ட 'தக்கவராய்' இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதான ஓர் சிந்தனை இப்போது ஏனோ மனதில் எழுகிறது.

பயமின்றி வாழ நாம் நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும். பயமற்ற வாழ்வு குறித்து நாம் நம் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஏனை விலங்குகளில் இருந்து எம்மை உயர்த்தி அல்லது தனித்து காட்டும் சிந்தனையை நாம் எப்போதெல்லாம்ஓரம் கட்டுகிறோமோ அப்போதெல்லாம் பயம் நம்மை ஆட்கொள்ளத் தலைப்படுகிறது. பக்தியைக் கூட பயத்தோடு இணைத்துப் பழக்கப் பட்ட நாம், பயத்தின் அத்திவாரத்திலேயே அடிப்படையான அனைத்தையும் கட்டி எழுப்பியிருக்கிறோம் என்பதை எப்போதும் நினைத்துப் பார்த்தது கிடையாது.

உரிமைகளுக்கான கோரிக்கைகளும் எங்கோ அல்லது எதோ ஓர் பயத்தின் இணைப்போடுதான் எம்மால் இணைக்கப் பட்டிருந்ததை அல்லது இணைக்கப் பட்டிருப்பதை எம்மால் அப்போது உணர முடியும்.

வாருங்கள் எம்மவர்களே! இனியாவது விடுதலை என்பதை எமக்கான 'தளை அறுப்பாக' கருதத் தலைப்படுவோம். நாமே அமைத்து, அதற்கு நாமே பயந்து, நாமே நம்மைச் சுற்றிக் கட்டி எழுப்பிய தளைகளை நாமே அறுப்போம். விழுவது வானமே ஆனாலும் விழ விழ எழுவதென்றால், நாம் முதலில் செய்ய வேண்டியது எமக்கான தளை அறுப்புக்களைத்தான் என்பதை புரிந்து கொள்வோம்.

தளைகளை அறு! சிறகினை விரி!
நம்பிக்கையுடன்,

ஆசிரியர்

இருக்கிறம்



## சில வருடங்களின் பின்னர்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரை கடலோடி....

எமக்கு ஏரம்பர் என கொள்ளுப் பேரனார் இருந்தார். பருத்தித்துறையிலிருந்து கப்பலோடி வியாபாரம் செய்வதே அவரது தொழில். 'பச்சைக்கிளி' என்ற பெயர் கொண்ட கப்பலை அவர் வைத்திருந்ததால் எல்லோரும் அவரை பச்சைக்கிளி ஏரம்பர் என்று அழைத்தனர். பருத்தித்துறை டவுனில் விநாயக முதலித் தெருவில் அவர் வீட்டிற்கு முன்னால் கப்பல் வியாபாரத்திலிருந்து கொண்டு வரும் காசுகளையெல்லாம் போட்டு எண்ணுவதற்காக ஒரு பளிங்கு மேடையையே அமைத்திருந்தாராம். கப்பல் கட்டும் வேலைகளுக்குக்கூட அந்தக் காலத்தில் பருத்தித்துறை பிரபலமாக விளங்கியிருக்கின்றது. அங்கிருந்து ஐரோப்பாவிற்கு கப்பல் சென்றிருக்கின்றது என்றெல்லாம் கூறுகின்றனர். தமிழர்களைப் போல சிங்களவர்கள் கப்பலோட்டவில்லை என்பது வேறு விடயம். இப்படி கப்பலோட்டிய தமிழரெல்லோரும் பின்பு ஆங்கிலேயரின் பாரபட்ச சட்டங்களுக்குப் பலியாகித் தங்கள் கடலோடும் தொழில்களையெல்லாம் கைவிட்டனர்.

அந்தக் காலமெல்லாம் போக இப்பொழுது புதிதாகக் கப்பலோட்ட எமது தமிழர்கள் முன்வந்திருக்கின்றனர். ஒப்பரேஷன் வணங்காமண் என்று பெயர் சூட்டப்பட்டு வன்னி மக்களுக்காக ஐரோப்பாவில் புலம் பெயர்ந்த தமிழர்கள் அனுப்பும் உணவு மற்றும் மருந்து நிவாரணப் பொருட்களைச் சுமந்து வரப்போகின்றது. வன்னியின் பாதுகாப்பு வலயமான புது மாத்தளன் பகுதிக்கு பொருட்களை நேரே கொண்டு வந்து இந்தக் கப்பல் இறக்குவதுதான் திட்டம். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தடையுத்தரவையும் மீறிக்கொண்டு வணங்காமண் கரை தட்டப் போவதாகச் சூளுரைத்திருக்கிறார்கள். வன்னி மக்களுக்கு உதவிகள் நிரம்பத் தேவையாக இருக்கின்றது என்பது ஒருபுறமிருக்க அதற்கு அப்பால் இந்த திட்டத்தினுள் பொதிந்துள்ள அரசியல் என்னவோ சாமர்த்தியந்தான்.

இந்தக் காலத்தில் கப்பலோட்டுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல. எத்தனை சட்ட விதிமுறைகளைப் படித்து அதற்கேற்ப ஆயத்தமாகவேண்டும். சர்வதேசச் சட்டங்களுக்கமைய பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த சிவப்பு நாடா வேலைகளையெல்லாம் செய்கின்ற போக்கில் வன்னியில் சிக்கியுள்ள மக்களுக்கு போதுமான உணவும் மருந்துப் பொருட்களும் அனுப்பி வைக்கப்படவில்லை என்ற நிலைமையை ஐரோப்பாவில் உள்ள அரச நிர்வாக மட்டங்களின் மத்தியில் உணர்த்துவதற்கு நல்ல யுக்தி. அது ஒரு கல்லால் அடிக்கின்ற முதல் மாங்காய்.

வணங்காமண் கப்பலின் பயணம் மட்டுமே உலக ஊடகவியலாளர்களின் கவனத்தை ஈர்க்கின்ற செய்திப் பெறுமானத்தைக் கொண்டிருக்கின்றது. இலங்கைப் பிரச்சினையை உலக ஊடகங்களின் செய்திகளின் முன்னணியில் தக்க வைப்பதற்கும் இது ஒரு நல்ல யுக்தி.அவ்வாறு ஊடகச் செய்திகளில் முன்னிலை வகிப்பதால் ஐ.நா போன்ற சர்வதேச ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளையும் அது ஊக்குவிக்கின்றது. அது அதே கல்லால் அடிக்கின்ற இரண்டாவது மாங்காய்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் இராணுவ ரீதியாக தமிழ் மக்களை எதிர்கொள்ளும் அதே நேரத்தில் அதனை இராஜதந்திர ரீதியாகவும் தமிழ் மக்களை எதிர்கொள்ள வணங்காமண் நிர்ப்பந்திக்கின்றது. இப்பொழுது அது இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கப் பார்க்கின்றது. அதனை பார்த்த மாத்திரத்தே சுடச் சொல்லி அரசாங்கம் பணித்திருக்கின்றது. வெறுமனே உணவும் மருந்தும் வைத்தியர்களும் தாதிகளும் இருக்கின்ற மனிதாபிமான நோக்குடன் வருகின்ற எந்தக் கப்பலையும் அவ்வளவு இலகுவாக சுட்டுவிட முடியாது. அப்படித்தான் சுட்டாலும் அதுவே சர்வதேச அரங்கில் பெரிய சர்ச்சைக்கு இட்டுச் செல்லும். எனவே அது அதே கல்லால் அடிக்கின்ற மூன்றாவது மாங்காய் இது.

சர்வதேச சமூகம் தனியாட்சிக் கோரிக்கையை இப்போதைக்கு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்காது. ஆனால் மனிதாபிமானப் பணிகளுக்கான சகல அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கும் அது ஆதரவு நல்கும். அவ்வகையாகத்தான் சர்வதேச அரசியலை நகர்த்தலாம். நேரே வன்னி மக்களுக்கு பொருட்கள் வழங்கப்படுவதன் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கம் அந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை என்று உணர்த்தப்படுகின்றது. எனவே தமிழர் தாயகத்தை மனிதாபிமான உதவிகள் கொடுப்பதனூடாக வலியுறுத்தும் அரசியல் காய் நகர்த்தலையும் வணங்காமண் செய்கின்றது. இதற்காகத்தானோ என்னவோ ஆங்கிலத்தில் இது Mercy Mission என்று அழைக்கப்படுகின்றது. அதே கல்லால் அடிக்கின்ற நான்காவது மாங்காய் ஆகும். நான்கு மாங்காய்கள் அடிக்கப்பட்டாலும் வேறு கேள்விகள் எழத்தான் செய்கின்றன. முன்னரும்கூட ஆயிரக்கணக்கான மக்கள்



இடம்பெயர்ந்து பரிதவித்துத்தான் போனார்கள். அப்போதெல்லாம் வராத வணங்காமண் இப்பொழுது மட்டும் விடுதலைப்புலிகள் இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டிருக்கும்போது மட்டும் வந்ததன் காரணம் என்ன? எனவே இது மக்களுக்காகவா அல்லது விடுதலைப் புலிகளுக்காகவா? உண்மை. இன்று முன்னெப்போதும் இல்லாத அவலத்தைப் பார்க்கின்றோம். ஈழ விடுதலைப் போராட்டத்தின் வாழ்வா சாவா வென்கின்ற கடைசிக் கட்டத்தை நெருங்கியது போல நிலைமை இருக்கின்றது. பொதுவாக கடைசிக் கட்டப் போராட்டத்தில்தான் பல புதிய யுக்திகள் வெடித்து முளைக்கின்றன. எல்லாம் சரிதான். ஆனாலும் கேள்வி எழுகிறதே?







# சிறகடிக்கும் சிந்தனைகள்.

புகையிரத நிலையத்தில் சனக்கூட்டம் அங்கும் இங்கும் அலைந்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டாலும், எல்லோர் மனதிலும் தோன்றுவதை வெளியே சொல்வதில்லை. ரயிலின் மாறுபடுகின்ற நகர்வு, ஒரு வித துக்கத்தை ஏற்படுத்துகின்றது. அந்நகர்வு வாழ்க்கையின் அர்த்தத்தை எல்லோருக்கும் கற்பித்து விடும். மரணம் ஒன்று இருக்கிறது, ரயில்பயணங்களைப் போன்று கட.. கட.. கட.. கட... என நம் வாழ்வும் அழுது கொண்டே செல்லும். பல பாஷைகளில் அலறும் ஒலிபெருக்கிகளில், பயணிகள் கவனத்திற்கு, யாழ்ப்பாணம் நோக்கி செல்ல இருக்கும் யாழ்தேவி இன்னும் 30 நிமிடங்களில் புறப்படும் எனக்கூற பல எண்ணங்கள் நெஞ்சில் ஊஞ்சலாடும். நம் உறவுகள், சினேகிதர்கள் மீது அப்போதுதான் என்றுமில்லாத பிரியம் ஏற்படும்.

ரயில் புறப்பட்டு மெல்ல மெல்ல காடுகளுக் கூடாகவும், வெட்ட வெளிகளுக்கூடாகவும் நகர ஆரம்பித்ததும், மனம் தூங்க சம்மதிக்காது. வெட்டவெளியில் ஓர் மகிழ்ச்சி. கட்டடங்கள் இல்லை, மனித சஞ்சாரங்கள் இல்லை, வெறுமையான வெளி. மிருகங்களின் நடமாட்டம் மட்டும் தான். ஆனாலும் அங்கும் ஓர் புதிய உதயம் சிந்தனையில் உருவாகின்றது. மனம் "ஆசைகள் அற்ற வெறுமைக்குள் வர" அந்த வெட்ட வெளியே ஒரு கூதூகலம் தான்.

ரயில் நகருக்குள் வந்ததும் பெய்த கடும் மழையும் ஏற்பட்ட வெள்ளமும், பழைய நினைவுகளை மனதில் தூண்ட நாம் தனிமையை உணர்வோம் அல்லவா! அப்போதுதான் எம் எல்லா பாசங்களையும் மனது ஆவலுடன் தேடும். இச்சிந்தனைகள் தான் நம்முடைய சந்தோஷமான இயல்பு வாழ்க்கைக்கு நம்மை அழைக்கின்றது.

இதனால் தான் திரைப்படக் கதாசாரியர்கள் இப்படிப்போன்ற பல இடங்களுக்குள் நம்மை திரைக்காட்சியினூடாக திரைக்குள் அழைத்துச் செல்கின்றனரோ என்னவோ தெரியவில்லை!

இன்னும் சிந்தியுங்கள் சிந்தனையுள்ள மானிட வர்க்கமே. சிந்திக்காத மிருகங்கள் இவ்வுலகில் இருப்பதாலேயே தான் வன்முறைகள் இன்னும் வாழ்கின்றன.

விஜயன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் ஸைலு

# சிரித்திடும் சித்திரை




**வசந்த காலத்தின் வருகையை வரவேற்பது சித்திரை மாதமாகும். சித்திரை என்று எம் உதடுகள் உச்சரிக்கும் போதே அவை சிரித்திடக் காண்போம்!.. அதுமட்டுமா? எம் நாட்காட்டியில் அதிகளவு விடுமுறையைக் காட்டுவதுவும் இம் மாதமே!. அவ்வாறே எம் நாட்டில் தமிழர் சிங்களவர் என்ற இன முரண்பாட்டை இல்லாது ஒழித்திட இன்றுவரை இருந்துவருவதுவும் இச் சித்திரைப்பிறப்பே!.**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**தமிழர்** புத்தாண்டாக இதுவரை காலமும் நாம் அனுஷ்டித்து வந்தது சித்திரை பிறப்பையே ஆகும். எனினும் கடந்த சில காலங்களாக இதன் தன்மையை மாற்றிடும் வகையில் தைப்பொங்கல் தினத்தை வருட பிறப்பாக கொண்டாடுவதாக தமிழ் அறிஞர்கள் சிலரின் ஆய்வின் பின்னரான நடைமுறைகள் ஏற்பட்டுள்ளன. இத்தருணத்தில் தமிழர், சிங்களவர் என இருவேறு சமூகங்கள் ஒன்றித்திருந்த ஒரேயொரு சந்தர்ப்பம் கூட பிரிந்து செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வந்து விட்டது.

வரலாற்றை சற்று தூசிதட்டி பார்ப்போமானால் இதுவரை காலமும் நாம் கணக்கிட்டு வரும் ஆண்டானது சௌமாரம் என அழைக்கப்படும். அதாவது பிரபவ விபவ எனும் தமிழ் ஆண்டு கணக்கெடுப்பானது சூரியனின் இயக்கப்படியே கணிப்பிடுவது. வான மண்டலத்தில் சூரியன் மீன ராசியிலிருந்து மேட ராசிக்குள் பிரவேசிக்கும் நேரமே புத்தாண்டு பிறக்கும் நேரமாக கருதப்படுவதாகும். இவ்வாறு ஒவ்வொரு ராசிக்கும் சஞ்சரிக்கும் 365 1/4 நாட்களை கொண்டது, ஒரு சௌமாரம் ஆகும். இது தை மாசி பங்குனி சித்திரை என பன்னிரெண்டு மாதங்களைக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டது. இதன்படி சூரியன் ஒவ்வொரு மாதமும் சஞ்சரிக்கும் காலத்தைக் கொண்டே மாதங்களிற்கான நாட்கள் கணக்கிடப்படும். இதனாலேயே சில மாதங்களுக்கு 32 நாட்கள் உள்ளது.



கடந்த 2008ஆம் ஆண்டு முதல் இந்திய தமிழக அரசானது தைப் பொங்கல் தினத்தை தமிழ் புது வருட பிறப்பாக கொண்டாடுவதாக தீர்மானித்துள்ளது. இதனை அறிமுகம் செய்தவர் திரு. மறைமலை அடிகளாவர். தமிழ் மீதுள்ள அதீத பற்றின் காரணமாக வேதாசலம் என்ற தமது இயற்பெயரினை மறைமலை அடிகளார் என மாற்றிக் கொண்டவராவர். 1921ம் ஆண்டு சென்னை பச்சையப்பா கல்லூரியில் திரு. மறைமலை அடிகளார் தலைமையில் சுமார் 500 தமிழறிஞர்கள் கலந்து கொண்டு தீர்மானம் செய்ததை 2008 ஆம் ஆண்டே தமிழக அரசு செயல் வடிவம் கொடுத்துள்ளது. தமிழருக்கென்று ஒரு தனித்துவமான ஆண்டு வேண்டுமென்ற நோக்கில் எழுந்தது இந்த செயல்பாடு. அதன்படி கி.மு.



31ம் நூற்றாண்டில் திருவள்ளுவர் பிறந்தார் என கருதிக்கொண்டு அதன்படி ஆண்டுகள் கணிக்கப்படுகின்றன.

எனினும் பழைமையை விரும்பாத பலரும் குறிப்பாக இலங்கையில் சிங்கள தமிழ் புத்தாண்டை அனுஷ்டித்து வந்த சிலரும் சித்திரை பிறப்பையே புது வருட பிறப்பாக கொண்டாடிட எண்ணுகின்றனர். அவ்வாறே இலங்கை அரசும் புத்தாண்டை மக்கள் சிறப்பாக கொண்டாடவென பல சலுகைகளை செய்துவந்துள்ளது. அவ்வகையில் வடபுல தமிழர்கள் மகிழும் வகையில் கடந்த வாரம் A-9 பாதையை திறந்துவைத்ததுடன் யாழ்தேவி ரயில் சேவைக்கான திருத்தப் பணியையும் ஆரம்பித்துள்ளது.

A-9 பாதையை திறந்துவைத்ததுடன் இதுவரை 22 பார ஊர்திகளில் சுமார் 1029 தொண் உணவுப்பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவை புது வருட கொண்டாட்டத்திற்காக மட்டுமன்றி மக்களின் நிவாரண நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்பட்டதாகும்.

கொண்டாட்டங்களுக்கும் சலுகைகளுக்கும் மத்தியில் நாட்டின் பாதுகாப்பை கருதிற்கொண்டு புத்தாண்டை முன்னிட்டு கொண்டாடப்படும் நிகழ்வுகள் தவிர்க்கப்படவேண்டும் எனவும் அவற்றில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் யாரும் கலந்துகொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ கடந்த வாரம் பணிப்பரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சலுகைகளுக்கும் சங்கடங்களுக்கும் மத்தியில் அனுகூலமான புத்தாண்டை கொண்டாடிட மக்கள் யாவரும் எதிர்பார்த்திருப்பதுடன் அழிந்துவரும் தமிழினம் சற்றேனும் ஆசுவசிக்கவென இச் சித்திரை பிறப்பு மலரட்டும்!..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு குழுவினரால் நாட்டின் இறைமையை ஏற்படுத்த முடியாது.

**ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்ட மேல்மாகாண சபை வேட்பாளரும், மனித உரிமைகள் தொடர்பான சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஷிரால் லக்திலக இருக்கிறம் சஞ்சிகைக்காக வழங்கிய நேர்காணல்**

**கேள்வி - உங்களைப்பற்றிய அறிமுகம்**

பதில் - நான் தொழில் வாண்மையான வழக்கறிஞர். குறிப்பாக மனித உரிமைகள், சமாதானம் தொடர்பாக செயற்பாட்டாளராக இருக்கிறேன். நான் 1989களிலிருந்து குறிப்பாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டேன். அத்துடன் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கைதானவர்களுக்கு இலவசமாக சட்ட உதவிகளையும் வழங்கினோம். நாம்தான் முதன்முதலாக இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்ப்பதற்காக யாப்புச் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறி Constitutional Reform Movement ஐ உருவாக்கினோம். 1994 ஆம் ஆண்டு அரசாங்கம் கூட எமது சிபார்சுகளைப் பார்த்தே தமது யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி பேசத் தொடங்கியது எனலாம்.



**கேள்வி - நீங்கள் அரசியலுக்குப் பிரவேசிப்பதற்கான பின்புலம் என்ன?**

பதில் - இலங்கையிலுள்ள பிரச்சினை தீர்ப்பதற்கு அரசியல் சமூகத்தால் மட்டுமே முடியும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில் சிவில் சமூகத்திற்கு அதற்கான சக்தி இல்லை. இதனால் செயற்பாட்டு அரசியல் நீரோட்டத்துக்குள் வரவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே தான் அரசியலில் குதித்தேன். இங்கு நான் ஐக்கிய தேசியக் கட்சியை தெரிவு செய்தேன். ஏனெனில் இந்தக்கட்சி மாத்திரமே நாட்டின் பிரச்சினைகள் குறித்து நடைமுறை சாத்தியமான கருத்துகளைக் கொண்டுள்ளது என நான் விசுவாசிக்கின்றேன்.



**கேள்வி - ஐ.தே.கட்சி தொடர்ச்சியாக தேர்தல்களில் தோல்வியடைகின்றது. இவ்வாறானதொரு கட்சியில் நீங்கள் ஏன் போட்டியிடுகின்றீர்கள்?**

பதில் - ஐ.தே. கட்சி தொடர்ச்சியாக தோல்வியடைகின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏனெனில் மிகவும் தீர்க்கமான இரு தேர்தல்களிலும் ஐ.தே.க தோல்வியடைந்தது என கூறமுடியாது. 2000ஆம், 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ஐ. தே.கட்சி தோல்வியடைந்ததற்கு காரணம் விடுதலைப்புலிகளின் தலையீடே ஆகும். 2000 த்தில் சந்திரிகாவுக்கு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் மக்களின் அனுதாபத்தைப் பெற்றதுடன், 2005 இல் விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கு மக்களை வாக்களிக்காமல் செய்தது தான் ஐ.தே.கட்சி தோல்வியடைவதற்கு காரணம் எனலாம். இலங்கையில் காணப்படுவது ஜனாதிபதி முறையாகும். இதனால் ஐ.தே.க வெற்றிபெற்றிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது.


**கேள்வி - விடுதலைப்புலிகள், ஐ.தே.கட்சியினர் ஆட்சிபீடமேறுவதை விரும்பாது எனக்கூறலாமா?**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பதில் - அப்படிக்கூறமுடியாது. விடுதலைப்புலிகள் வடக்கு கிழக்கில் தேர்தலை நடாத்த இடமளிக்கவில்லை எனலாம். இது அவர்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். அது ஐ.தே.கட்சிக்கு என்பதல்ல. கடந்த 5 ஜனாதிபதி தேர்தலிகளில் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு தென்னிலங்கை ஜனாதிபதியை தெரிவு செய்ய இடமளிக்கப்படவில்லை. இது மற்றுமொரு அரசியல் கொள்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org



**கேள்வி- தற்போதைய யுத்த மோகம், யுத்த வெற்றிக்களிப்பில் ஐ.தே.கட்சியால் வெற்றிபெற முடியுமென நீங்கள் நினைக்கின் றீர்களா?**

பதில் - நாம் விசுவாசிக்கின்றோம். எம்முடைய கருத்தை, கொள்கையை பாராளுமன்றத்திலும், மாகாணசபையிலும் பிரதிபலிக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றோம். தற்போதைய நிலைமையில் மக்கள் யுத்த வெற்றிக் களிப்பில் மூழ்கி இருக்கின்றார்கள் என்பது உண்மை. ஆனால் அது சிறிது காலத்தில் மாற்றமடையலாம். நாட்டின் பொருளாதாரம், ஊழல் மற்றும் நல்லாட்சி போன்ற பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. அவற்றுக்கு எவ்விதமான தீர்க்கமான முடிவுகள் இல்லை. ஆகையினால் இந்த யுத்தக் களிப்பு என்பது தற்காலிகமானதேயாகும். அது தொடர்ந்து இருக்காது.

அடுத்த முக்கிய தேர்தல் என்று பார்த்தால் திரும்பவும் அடுத்த ஜனாதிபதி தேர்தலாகும். இவ் வருடம் நவம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் எந்நேரமும் ஜனாதிபதித் தேர்தல் நடக்கலாம். இத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாக இருக்கும். இந்த ஜனாதிபதித் தேர்தலை முகம் கொள்வதற்கான ஆரம்ப அடித்தளமாக இத்தேர்தலை நாம் எதிர் கொள்கிறோம்.



நம்மட உடம்புக்குள்ள இருநூறுக்கும் மேல எலும்புகள் இருக்கு.. தெரியுமா?

மெதுவாச் சொல்லுங்க டொக்டர். வெளிய என்ர நாய் உட்கார்ந்திருக்குது




**கேள்வி - யுத்தத்தினால் பாதிக் கப்பட்டுள்ள மக்கள் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?**

பதில் - ஐ.தே.கட்சி எவ்வாறாயினும், தனிப்பட்ட முறையில் இது தொடர்பாக நான் பெரிதும் வருந்துகின்றேன். நான் நினைப்பது இந்த பிரச்சினை உடலில் ஏற்பட்டுள்ள ஒரு காயம் ஆகும். அந்தக் காயத்தின் மேலே உள்ள ஈக்களை கொலை செய்வதன் மூலம் அந்தக் காயம் ஆறப்போவதில்லை. அதற்கான நோய் எதிர்ப்பு மாத்திரைகள் வழங்கப்பட வேண்டும். இலங்கையிலுள்ள பிரச்சினை யாதெனில் தமிழ் மக்களை தீர்மானமெடுக்கும் செயன்முறையிலிருந்து அப்புறப் படுத்தியதே ஆகும். அதாவது அரசியல் சுதந்திரம் என்பது தமிழ் மக்களுக்கு பல ஆண்டுகாலமாக மறுக்கப்பட்டுள்ளதுடன், இல்லாதொழிக் கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் யுத்தத்தை மேற்கொள்வது ஒரு போதும் தீர்வாகாது. இந்த யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளனர். தமது உறவுகளை இழந்துள்ளனர். பாதுகாப்பின்மை, போசாக்கின்மை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக் கின்றனர். பொறுப்பு வாய்ந்த அரசாங்கமானது தமது பிரஜைகள் மீது இதனைவிட அக்கறை செலுத்த வேண்டும்.

**கேள்வி - இன்றைய காலகட்டத்தில் வடக்கில் தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற துயரங்கள் பற்றி தென்னிலங்கை மக்களுக்கு எவ்விதமான தகவல்களும் கிடைப் பதில்லை. அவர்கள் யுத்தக்களிப்பில் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் உங்கள் கட்சி மூலம் தென்னிலங்கைக்கு யதார்த்த நிலமைகளை எடுத்துக் கூறுவதற்கு எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்கின் றீர்கள்?**

பதில் - இந்த நேரத்தில் மக்களுக்கு யுத்தம் தொடர்பான களிப்பு காணப்படுகின்றது. அது எந்நாளும் இருக்காது. இது முடிவடைவதுடன் எமது கருத்துக்களை கொண்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லுவோம். இந்தப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையே தீர்வு என்பதை எல்லோரிடமும் எடுத்துச் செல்லுவோம். இதனால் இந் நேரத்தில் எமக்கு எதிர் நீச்சல் போட முடியாது. இவ்வாறு செய்யும் போது அரசாங்க எதிர்ப்பினை சந்திக்க நேரிடுகிறது. ஏனெனில் சமாதானம் பற்றிப் பேசுபவர்கள் தேசத்துரோகிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர். இதனால்தான் தற்போது ஓரளவு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

**கேள்வி -இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் தெற்கு அரசியல்வாதிகளா?**

பதில் - ஆம், நிச்சயமாக, அரசியல் உயர் குலாமினர்தான் இந்த பிரச்சினையை தோற்றுவித்தனர். 1921 இலிருந்து 1947 வரை காணப்பட்ட சிறிய பிரச்சினையை இன்று பாரிய பிரச்சினையாகத் தோற்றுவித்துள்ளனர்.


**கேள்வி- சிறுபான்மையினருக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் யாவை?**

பதில்- நான் ஒரு போதும் இச் சிறுபான்மைகள் பற்றி கூறவிரும்பவில்லை. இலங்கையில் உள்ள அனைவரும் இலங்கையரே. அதாவது தேசிய குழு என்பதையே கூறுகின்றேன். இந்த தேசிய குழுவினருக்கு வெவ்வேறுபட்ட அரசியல் அபிலாசைகள் காணப்படுகின்றன. இந்நிலைகளில் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கமைய அதிகாரம் மத்தியப்படுத்தப்படாததாக (Non centralize) வர வேண்டும். இதுதான் ஜனநாயகமாதல் எனப்படுகின்றது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைக் கொண்டுதான் மக்கள் இறைமை கட்டியெழுப்பப்படவேண்டும். ஒரு குழுவினரை மாத்திரம் கொண்டு மக்கள் இறைமையை ஏற்படுத்த முடியாது.

நேர்கண்டவர்
[illegible] மொஹமட்





# பெத்தம்மா

## குறுந்திரைப்படம்


கல்முனை கலைப்புங்கா மன்றம் தயாரிப்பில் எழுத்தாளரும், வானொலி நாடக ஆசிரியரும் அறிவிப்பாளருமான. S.ஜனூஸ் எழுதி இயக்கும் 'பெத்தம்மா' குறுந் திரைப்படத்தின் முதற்கட்ட படப் பிடிப்புகள் கல்முனை, சாய்ந்த மருது மற்றும் அக்கரைப்பற்று பிரதேசங்களில் மிக வேகமாக நடந்தேறி வருகின்றன. பெத்தம்மா குறும் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு, கல்முனை இஸ்லாமபாத் தேக்கஞ்சோலை நலன்புரி நிலையத்தில் கடந்த 11/03/2009 அன்று ஆரம்பமாகியது.

வேகமாக வளர்ந்து வரும் 'பெத்தம்மா' குறுந்திரைப்படத்தில் நடிகரும் இயக்குனருமான M.A.C. சர்மில் ஷாகீர் ஹுசைன், நுஷாரி, நந்தனி, நதீகா மற்றும் பலரோடு பெத்தம்மா குறும்படத்தை எழுதி இயக்கும் S. ஜனூஸும் நடிக்கின்றார். இந்த குறுந்திரைப்படத்துக்கான படப்பிடிப்பு ஒளிப் பதிவு வேலைகளை பிரபல ஒளிப்பதி வாளர் ஷாஹீர் ஹுசைன் மேற் கொள்ள ஒலிக்கலவையை 15 வயதே நிரம்பிய சிறுவன் ஜெஸ்லி சர்மில் மேற்கொண்டு வருகிறார். தயாரிப்பு மேற்பார்வையை ஜெஸ்மி மூஸாவும் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஜாபீர் ஆகியோரும் செய்து வருகின்றனர்.

சுனாமிக்குப் பின்னரான மக்களின் வாழ்வியல் யதார்த்தங்களை சித்தரித்துக் காட்டுகின்ற ஒரு குறும் படமாக, காலத்தின் தொடுதல்களாக இந்த பெத்தம்மா குறும்படத்தை ரசிகர்கள் வெகுவிரைவில் பார்த்து ரசிக்கலாம். நாமும் அதற்காக காத்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mrs காதலி

# கணவன் மனைவி பற்றிய புதினங்கள்

**செக்ஸ் அல்லது பாலுறவு என்பதே ஏதோ தகாத வார்த்தை போல் கருகின்ற சமூகத்தில் நாங்கள் வாழ்கின்றோம். இன்றைய மனித வாழ்க்கையின் வரட்டுப் போலித்தனத்துக்கு இதைத் தவிர வேறு நல்ல உதாரணம் கிடையாது. உண்மையில் பார்க்கப்போனால் உயிர் வாழ்வதும் இனம் பெருக்குவதும்தானே மனித வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையும் சாராம்சமுமாகும்.**

**வயிற்றுக்கு** உணவும் உடலுக்கு சுகமும் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்கின்றபோது அந்த உடற்சுகத்தை முற்றும் மறுதலித்துக் கொண்டு அப்படி ஏதோவொன்று இல்லையென்றமாதிரி, வாழ முற்படுகின்றோம். அதைப் பற்றி விவாதிப்பதற்கே பயப்படுகின்றோம்.

பல மனோதத்துவ நிபுணர்களின் அபிப்பிராயப்படி உலகில் காணப்படும் மனநோய்களில் அனேகமானவை செக்ஸ் இச்சைகளை அடக்கி வாழ்வதால் ஏற்படுபவையாகும். இயற்கைக்கு மாறாக வாழ்ந்தால் வேறு என்ன நடக்குமாம்? எமது கிராமத்துப் பேயோட்டும் கதைகளை ஆராய்ந்து பாருங்கள். பேய் பிடித்து ஆட்டுபவர்கள் முக்காலும் பெண்களாகத்தான் இருப்பார்கள். நீங்கள் இது ஏன் என்று யோசித்திருக்கிறீர்களா? ஏன் ஆண்களுக்கு அவ்வளவாக பேய் பிடித்து ஆட்டுவதில்லை? ஆண்களைவிட பெண்கள் தான் தமது பாலுணர்வுகளை அடக்கி வைக்க வேண்டியவர்களாக சமூகம் உருவாக்கியிருக்கிறது. எனவே அவர்களுக்குத்தான் இத்தகைய மனக் கோளாறுகள் அதிகமாக ஏற்படுகின்றன. பேய் இறங்கியதுபோல் பெண் ஆடுவதும் அதனை விரட்ட அப்பெண் மீது இழைக்கப்படும் வன்முறைகளும் ஒரு அடங்காப் பிடாரியை (அதாவது அடக்கி வைக்க முடியா பாலுணர்வுகளை) அடக்கும் செய்கையின் அடையாளங்களாகும்.

இன்று பரவலாக கைக்கொள்ளப்படும் ஓர்பாற்புணர்ச்சி, அதாவது லெஸ்பியன், 'கே' என்று நாம் குறிப்பிடும் நடத்தைகளாவன, இவ்வாறான அடக்கு முறைக் கட்டமைப்புகளுக்கூடாகத்தான் வந்திருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது. ஆண்கள் மட்டும் அல்லது பெண்கள் மட்டும் நீண்ட காலங்கள் தங்கி வாழ்கின்ற மதம் சார்ந்த மடங்களிலும், பெண்களையும் ஆண்களையும் பிரித்து வைக்கும் கலாசாரங்கள் உள்ள சமூகங்களிலும், உழைப்புக்காக பிடித்துக்கொண்டு போகப்பட்ட ஒரு பால் அடிமைகள் மத்தியிலும்தான் தற்பாற்புணர்ச்சி தோன்றியிருக்கவேண்டும். அவர்கள் தங்கள் இச்சைகளை ஒருவருக்கொருவர் தீர்த்துக் கொண்டிருந்திருப்பார்கள். இவ்வழக்கம் எங்களுடைய எல்லா வழக்கங்களையும் போலத்தான் பின்பு எங்கள் மரபணுக்கள் மூலமாக அடுத்து வந்த சந்ததியினருக்கு ஊட்டப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் என்ன பாலியல் உறவே இழிவானது என்று மனிதர்கள் கருதிய வில்லங்கத்தால்தான். இப்பொழுதெல்லாம் தற்பாற்புணர்ச்சியை இழிவான பழக்கமென்று தூற்றிக் கொண்டு திரிகிறார்கள். நாங்களே ஒரு வழக்கத்தை உருவாக்குவோம், பிறகு அதைக் கைக்கொள்ளும் மனிதர்களையே ஏறி மிதிப்போம். ஹ்ம், இந்த உலகத்தை என்னதான் செய்வது.

இன்று எங்கள் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதிகள் அனேகரின் வாழ்க்கையைத் திறந்து பார்த்தால் தெரியும் சங்கதி. அவர்களில் தொண்ணூறு வீதமானோர் ஒன்றாக ஒரே படுக்கையறையில் படுப்பதில்லை! மனைவி அனேகமாக தனது மகளின் அறையில்தான் படுக்கின்றாள். கணவன் தனது அறையில் தனியேயோ அல்லது தனது மகனுடனோதான் படுக்கின்றான். கணவன் தனக்குத் தேவையான பொழுது மனைவி படுத்திருக்கும் அறைக்குச் சென்று தனது விஷயத்தை முடித்துக் கொண்டு பிறகு மீண்டும் தனது கட்டிலில் போய்ப் படுத்துக் கொள்வானாம். சில நேரங்களில் பிள்ளை விழித்துக் கொண்டிருந்தால் அதுவும் செய்ய முடியாது. ஒன்றாகப் படுக்கும் தம்பதிகளின் கதையும் கிட்டத்தட்ட இப்படித்தான்ன், அவ்வளவு வித்தியாசங்களில்லை. கணவனுக்குத் தேவையான நேரமெல்லாம் கடகடவென்று வேலையை முடித்துக் கொண்டு படுக்கச் சரி. உடலுறவு கொள்ள முன்பு அதற்கான தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று நினைத்து நடைமுறைப் படுத்துபவர்கள் மிகச் சிலரே. இதைப் பற்றி நாங்கள் ஒருமுறை பேசிக்கொண்டிருந்த போது, இவர்களெல்லாரும் ஒருவரையொருவர் ஆடையின்றி ஒழுங்காகப் பார்த்திருப்பார்களா என்பதே சந்தேகமாயிருக்கின்றது என்று உண்மையாகவே ஒரு நண்பி கவலைப்பட்டாள்.




பல இளம்பெண்களுடன் பேசிப் பார்த்தால் இப்படியான நடத்தைகளின் விளைவுகள் தெரியும். அனேகருக்கு செக்ஸ் பிடிக்காத விஷயமாக இருக்கின்றது. "அதிலென்ன சுகம்? சும்மா வலிக்கும் அவ்வளவுதான்" என்கின்றனர். இதைக் குறித்துப் பயப்படுபவர்களும் நிறையப்பேர். அவர்கள் எல்லோரும் கணவனின் தேவை கருதியே பல்லைக் கடித்துக் கொண்டு அவன் செய்வதைப் பொறுத்துக் கொண்டு இருக்கின்றனர். இந்த பரிதாப நிலைக்கு முக்கியமான காரணம், ஆண்களுக்கு செக்ஸ் உணர்வு விரைவாகத் தோன்றும் அதே சமயத்தில் பெண்களுக்கு கொஞ்சம் மெதுவாகவே தோன்றுகின்றது. எனவே பெண்களை பலவிதங்களில் தயார் நிலைக்கு கொண்டு வரும்போதுதான் அவர்கள் சுரப்பிகளும் சுரந்து, துவாரங்கள் விரிந்து சுகமான கூடலுக்கு வழிவகுக்கின்றது. இதை உணராமல் அனேக ஆண்கள் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள்.



நிஜ வாழ்க்கையில் அனுபவிக்காததையே சினிமாக்களிலும் இலக்கியங்களிலும் தேடுகின்றோம், இல்லையா? இதனால்தான் செக்ஸை மலினமாகக் கையாளும் படைப்புக்கள் பெருகியிருக்கின்றனவோ என்று நான் நினைக்கின்றேன். காதல் இல்லாத விரசமான வார்த்தைகள் இல்லாத சினிமாவே இல்லை என்று ஆகிவிட்டது. கேள்வி இருந்தால்தானே விநியோகம் வரும்?

ஒரு திருப்திகரமான செக்ஸ் வாழ்க்கை எவ்வளவு வருடங்கள் சென்றாலும் அலுப்புத் தட்டாது. புத்தம்புது மணத்தம்பதிகள் போலே என்றும் வாழலாம். அது ஆண்கள் பெண்களின் உடல்களின் ஹோர்மோன் சுரப்புக்களின் சமநிலையைப் பேண உதவி அவர்களை அவர்கள் வயதிலும் விட இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கும். திறந்த, சமநிலையுள்ள, தாராள மனதுடன் உலக விடயங்களை அணுகும் முதிர்ச்சியைக் கொடுக்கும். எல்லாவற்றையும்விட முக்கியமாக புத்தாக்க உணர்வுகளைத் தூண்டிக்கொண்டிருக்கும்.

எவ்வாறு உணவைத் தயாரித்து உண்பது ஒரு கலையாகவும் விஞ்ஞானமாகவும் வளர்ந்ததோ அதே மாதிரிதான் உடலுறவு கொள்ளுவதும் ஒரு கலையாகவும் விஞ்ஞானமாகவும் வளர்த்திருக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள். இதைப் பற்றி எழுதியும் இருக்கிறார்கள். (வாத்ஸ்யாயனர் கிட்டத்தட்ட கி.பி 2ம் நூற்றாண்டில் எழுதிய காமசூத்திரா என்னும் நூல் மிகவும் பிரபலம் வாய்ந்த செக்ஸ் வேதமாகும். இதைத் தவிர, அனங்க ரங்கா என்னும் நூலை கல்யாண மல்லா என்பவர் 15ம், 16ம் நூற்றாண்டுகளில் எழுதியிருக்கிறார். இதைத் தவிர, 1970களில் மேற்கு நாடுகளில் செக்ஸ் புரட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் ஏராளமான புத்தகங்கள் அங்கு வெளிவந்திருக்கின்றன. இவற்றில்,சீனப் பாரம்பரியங்களுடன் கலந்த தந்திரயோக உடலுறவு முறைகள் பற்றிய நூல்கள் மிகப் பிரபலமாக அங்கெல்லாம் விற்பனையாகின. நாங்கள் சமையல் குறிப்புப்



புத்தகங்கள் வாங்குவது போலவே உடலுறவில் ஈடுபடுவது பற்றிய நூல்களை வாங்குவதில்லை. அது கண்றாவியோ என்போம். இந்தப் பழக்கத்தை விட்டு திறந்த சுதந்திரமான மனதுடன் இந்த விடயத்தைக் கற்றுக் கொள்ள வாருங்கள். அடுத்து வரும் இருக்கிறம் இதழ்களில் உங்களை சந்திப்பேன் ●●

**தமிழ்சினிமாவின்** விலைகூடிய மனிதர் தாணுதான்! பல் குத்துவதற்கு கூட தங்க ஊசியை பயன்படுத்துவார் போலிருக்கிறது. 'அண்ணே! டேட்ஸ் தர்றேன். ஒரு படம் பண்ணலாம்' என்று சொன்னாராம் விக்ரம். அவரே ஒரு டைரக்டரையும் அழைத்து வந்தாராம். கதையை கேட்ட தாணு 'தம்பி இது ஐந்து கோடி பட்ஜெட்ல முடியுற கதையா இருக்கு. அந்நியன் மாதிரி பெரிய படமா இருந்தாதான் உங்களுக்கு மரியாதை' என்றாராம். பிறகு சுசி வந்தார். விக்ரம் ரசிகர்களுக்கு குஷியும் வந்தது. ஏனென்றால் கந்தசாமியின் பட்ஜெட்டை இப்போது கணிக்கவே முடியாது போலிருக்கிறது. தேருக்கு திருவிழா பெருமை, திருவிழாவுக்கு தேர் பெருமை என்கின்ற மாதிரி படத்தில் பணியாற்றிய எல்லாரையும் அசர வைத்திருக்கிறது கந்தசாமி!

இயக்குனர் சுசிகணேசன், விக்ரம், ஸ்ரேயா, இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத், ஒளிப்பதிவாளர் ஏகாம்பரம், பாடலாசிரியர் விவேகா, ஆகியோர் மேடையில் இருக்க 'கந்தசாமி' உருவான கதையை விவரித்தார் தாணு. எழுதி வச்சுக்கொள்ளுங்க கந்தசாமி தமிழில் தயாரிக்கப்பட்ட ஹொலிவுட் படமா இருக்கும்' என்றார். மேடையில் பேசிய எல்லாருமே சுசியை அவ்வளவு எளிதில் திருப்திபடுத்த முடியாது. அவர் இன்னும் இன்னும் தேடிக் கொண்டே இருப்பார்' என்றார்கள்.




தேவிஸ்ரீபிரசாத் பேசும்போது எல்லா படத்திற்கும் சப் டைட்டில் போடுற மாதிரி கந்தசாமி... திருப்தியடையாத சுசின்னு போட்டுடலாம் என்று சொல்ல பலத்த சிரிப்பு மேடையில். வழக்கமாகவே ஜொலிடைப் விக்ரம். மற்றவர்களுக்கும் டைரக்டர் சுசிகணேசனுக்கும் படப்பிடிப்பில் இருந்த அந்நியோன்னியத்தை சொல்ல நினைத்தவர்' சுசியும் ஏகாம்பரமும் சுசியும் தேவிஸ்ரீ பிரசாத்தும் சுசியும் நானும் சுசியும் ஸ்ரேயாவும்' என்று சொல்லிவிட்டு சிரிக்க வெட்கத்தில் முகம் சிவந்தார் ஸ்ரேயா. 'ச்சும்மா...' என்று கண்ணடித்த விக்ரம் 'இந்த படத்தின் ஒவ்வொரு அசைவும் சுசியோட கற்பனை. மிரட்டியிருக்காரு' என்றார் பிரமிப்பாக.

பாடலாசிரியர்தானே என்று லேசா நினைக்காமல் விவேகாவின் தோளில் கைபோட்டுக் கொண்ட சுசிகணேசன் 'உங்களுக்கு ஒரு ஸ்கூப் நியுஸ் சொல்றேன். இந்த படத்திலே விவேகாவும் ஒரு பாடல் பாடியிருக்காரு' என்றார்.

இவ்வளவு விஷயங்களும் நடந்தது 'கந்தசாமி' ஓடியோ வெளியீட்டு விழாவில் என்றால் அதுதான் இல்லை. ஓடியோ வெளியீடு எப்



போது நடக்கும் என்பதை சொல்ல ஒரு பிரஸ்மீட். அதையே ஓடியோ ரிலீஸ் போல பெரிதாக நடத்திக் கொண்டிருந்தார் தாணு. முன்னதாக நான்கு விதமான டிரெய்லர்களை திரையிட்டார்கள். மிரட்டல்... மிரட்டல்... மிரட்டல்...! எல்லாரும் பாராட்டிய மாதிரி தமிழ்சினிமாவின் நம்பர் ஒன் அந்தஸ்தை எளிதாக எட்டிவிடுவார் போலிருக்கிறது சுசி கணேசன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்சிகளின் மாநாடு

எந்தன் குருவி இடியப்பம் சொதியோடு
அந்தச் சிறு உணவு அருந்துகிறாள்.
என்தோளில்
தொற்றித் துவண்டு துடியாட்டக் கையசைத்து
பற்றியென் முகத்தில்
பளீரென்றறைந்து விட்டு
சிங்காரச் சிரிப்பு வலையையெங்கும் வீசுகிறாள்
எங்கள் அயலில் இவளைப் போல்
எத்தனையோ
வண்ணக் குருவிகள்
வாயாடிப் பறவைகள்
சின்னஞ் சிறுசிட்டு திரண்டு வரும் புலுனிகள்
மின்தந்தி மீது விழுந்தெழும்பும் கரிக்குருவி
கானக் குயில்கள் சேவல்கள்
விறாத்திக் கழுத்து வெட்டிக் குஞ்சுகள் தூரப் பறந்தாலும்
தொடர்ந்து நித்தம் கையசைத்துப்
போகின்ற வௌவால்கள் புறுபுறுக்கும் வெண்புறாக்கள்
இத்தனை பட்சிகளும் இதம்பதமாய் குரல் வைக்க
புத்தம் புதிய இசை
புரளும் அயல் மீதலையாய்!
எந்தன் குருவி இவற்றை விட ஓர் விநோதச்
சந்தம் இசைத்துத்
தலையாட்டி ஆடுகிறாள்
வாயினிலே காற்பங்காய்.. முகத்தில் முக்காற்பங்காய்
தீத்திய உணவிருக்கச் சிரிக்கின்றாள்.
சுற்றியுள்ள
அத்தனையும் அவளின் சிரிப்பு வலையினிலே
சிக்கி மலர்ந்து சிலிர்க்க
நேற்றைப் போல்
எந்தன் குருவி இடியப்பம் சொதியோடு
அந்திச் சிறு உணவை
இன்றும் அருந்துகிறாள்.

ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விருட்சங்களுக்கான விதைகளின் செய்தி!!

மாணவர்களுக்கு எப்போதும் பரீட்சைகுறித்த பதட்டமும் பயமும் இருந்து வருகிறது. அதற்குக்காரணம் பரீட்சைக்குத் தயார்செய்ய வேண்டிய சரியான முறைமையை அறியாதிருப்பதே ஆகும். வகுப்பறையை கடினமாக்குவதே, பரீட்சையை இலகுவாக்கும் முதல் வழி, நீங்கள் இலகுவாக மாற்ற முயலும் பாடசாலை வகுப்பறையை தேடலுக்குரியதாக்குவது பொதுவாகவே மாணவர்கள் வகுப்பறையை சுலபமாகவே பார்க்க விரும்புகின்றனர். சிக்கலான கேள்விகளுக்கு பதிலளித்துப் பழக வேண்டும். கடினமான பயிற்சியை வகுப்பறையில் செய்தால் மட்டுமே பரீட்சை இலகுவாகும். இவற்றுக்குப் பழக்கப்படாதபோது நீங்கள் பரீட்சையில் சந்திக்கும் அனைத்தும் அல்லது சில கேள்விகள் சிக்கலாகவே தோன்றும் இதனால் மனம் பதட்டமடைந்து புள்ளி இழப்புகள் ஏற்படும்.

மாணவர்கள் பரீட்சையில் எதிர்கொள்ளும் அடுத்த பிரச்சினை நேரமுகாமைத்துவம் ஆகும். பரீட்சைத்தாளின் எந்தக் கேள்விக்கு முதலில் பதிலளிப்பது என்பதிலும் இது தங்கியிருக்கிறது. இலகுவானதும் நேரக் குறுக்கமுடையதுமான கேள்விகளுக்கே முதலில் பதலளிக்க வேண்டும்.

எப்பொழுதும் பரீட்சை குறித்த பயம் காணப்படக் கூடாது. வழமைபோல பரீட்சை காலத்திலும் மனதை இலேசாக வைத்திருக்கப் பழக வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே சரியாகச் சிந்தித்து விடையளிக்க முடியும்.

பரீட்சைக்கு உயிரைக்கொடுத்து படிக்கிறேன் பேர் வழி என்ற பெயரில் உடலை வருத்தக்கூடாது. உடல்வலுக் குறைகிறபோது அது சிந்தனையையும் மோசமாகக் கெடுத்துவிடும். பரீட்சை நேரத்தில் தேவையற்ற பிரச்சினைகளை தலைக்கு எடுக்காதீர்கள். (இதில் உங்கள் காதலும் அடக்கம். கற்கின்ற சிந்தினையை மாற்றி மனதின் வெற்றி இலக்கையும் கெடுத்துவிடும்.



மனனம் செய்ய வேண்டிய விடயங்களையும் குறிப்புகளையும் உங்கள் கைகளால் மீண்டும் எழுதுங்கள். முடிந்தவர்கள் கணனியில், அல்லது ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து திரும்பத் திரும்பக் கேட்பதன் மூலமும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருக்க முடியும். நீங்களே வாசித்து பதிவு செய்யுங்கள்.



கற்கும் போது இன்னொருவருக்கு சொல்லிக் கொடுப்பது போன்று கற்கவேண்டும். "நான்தான்" படிக்கிறேன் என்று சொல்கிறபோதே நானோடு தானும் இருப்பதைப் புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம். அப்போது தான் ஆழமான விளக்கம் ஏற்படும் என்று மனோவியலாளர்கள் கருதுகிறார்கள்.

அறிவை வளர்க்கும் ஆவல் உள்ளவர்கள் உண்மையில் மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும். அப்பொழுது தான் உங்களிடமிருந்து வெளியேறிய வெற்றிடம் புதிதாக இன்னொன்றை பெருக்கும் ஊற்று நீர் போன்றது. மற்றவர்களுக்கு அறிவைப் பாய்ச்சுவதில் தாமதிக்க வேண்டாம். பாய்ச்சாதவர்கள் ஆய்வுசெய்ய முடியாதவர்களாக படித்த முட்டாள்களாகவே மாறுவார்கள். கருத்துப்பரிமாற்றம் மிகவும் அவசியமானது.

நித்திரையைத் தவிர்த்து அதிக நேரம் படிப்பது எவ்வாறு? குறைவாக சாப்பிட்டு நித்திரை மயக்கத்துடன் காலைத் தண்ணீரில் நனைத்தபடி வைத்து படிக்காதீர்கள். "நன்றாக சாப்பிட்டு விட்டு, அலாரம் ஒரு மணித்தியால அளவு வைத்துவிட்டுத் தூங்குங்கள். பின்னர் எழுந்து புதிய உத்வேகத்துடன் எவ்வளவு நேரமும் இருந்து படிக்கலாம்". அதிகாலை நேரத்துடன் எழும்பத் தேவையில்லை. சுமாராக எழுந்து படிக்கலாம். செய்து பாருங் கள்!

உறுதியும் தெளிவும் உள்ளவர்களாய் கற்கப் பழகுங்கள் வெற்றி உங்களுக்கே. இங்கே சொல்லப்பட்டவை எல்லாம் வெறும் விதைகள் மட்டும் தான், பெரு விருட் சங்கள் அல்ல. விதைகளை போட்டால் மட்டுமே முளைக்க முடியும். விதைத்துப் பாருங்கள் விருட்சமாகலாம். வியாபித்து விரியலாம். வாழ்த்துக்கள் நம் நாளைய நிழல்களே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுசொம்

**'இருக்கிறம்' என்ற பெயரே ஆரம்பத்தில் பல வாதப் பிரதிவாதங்களுக்கு உட்பட்டது. தமிழகத்தின் எல்லா வட்டார வழக்குகளையும் பரிச்சயம் பண்ணிக் கொள்ள முடிகிற எங்கள் வாசகர்களுக்கு. 'எம்தமிழை' எழுத்தாய் பார்ப்பதில் தயக்கம் இருக்காது என்று நம்புகின்றோம். செங்கை ஆழியானின் "ருத்ர தாண்டவம்" யாழ்ப்பாணத் தமிழை எமது இதழில் பேசுகிறது. திமிலைத்துமிலனின் "நெருநல் நினைவுகள்" மட்டக்களப்பு தமிழை பேசுகிறது.**

இதெல்லாம் தேவையா? அவசரமா? என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம். இவை படு அவசரமானவை. உள் நாட்டிலேயே புலம் பெயர்ந்து, கிராமங்களை விட்டு நகரங்களுக்குள் முடங்கிப்போன குடும்பங்கள், கடந்த இரு தசாப்தங்களுக்குள் மறந்துபோன எம் வார்த்தைகள் ஆயிரம். எம் பேச்சோடு அல்லும் பகலும் உறவாடிய ஆயிரமாயிரம் வார்த்தைகளை நாம் இழந்து விட்டோம். எம் இதயமான கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து நகரங்களில் வாழுகிறவர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு இந்த ஆக்கம் எந்தளவுக்குப் புரிகிறது என்பதை கொஞ்சம் பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைப் பரீட்சிப்பதுமாகும்.

காலம்பற பலகாரத்துக்கான அடுக்குகள் சுறுசுறுப்பாகத் தொடங்கீற்று. அரிசி மாவைக் குழைத்து சுண்டுப் பேணியால குத்திக்குத்தி அம்மா மணிமணியாத் திரளச் செய்யிறா. விடிவெள்ளி காலிக்க முந்தியே எழும்பின கையோடு முத்தத்தைக் கூட்டிப் பெருக்கி சாணத் தண்ணிய கரைச்சுத் தெளிச்சிட்டு அக்கா கிணத்தடிக்குப் போறா. சட்டி, பானை, சருவக்குடம், கும்பா, லோட்டா, அரிக்கன் சட்டி, வல்லுவம், சட்டுவம் ஏனைகளும் பாத்திரங்களும் கிடாரத்துக்க குமிஞ்சு போய்க்கிடக்கு.

அதுகள ஒவ்வொண்டா எடுத்து சாம்பலும் புளியும் போட்டு பொச்சுத் தும்பால கரிபோகத் தேய்ச்சு விளக்கி மினுக்கிறா அக்கா. பட்டையில தண்ணியக் கோலி வார்த்துக் கழுவ புதுசு போல ஒவ்வொண்டும் பளபளக்குது.

குந்தியிருந்ததில உளையிறக் குதிக்காலை உரஞ்சி விட்டபடி நாரீல கையக் குடுத்து நிமிர்ந்தவ சருவக்குடத்தில நல்ல தண்ணியை நிறைச்சு வச்சிட்டு, ஒண்டடி மண்டடியாக் பாத்திரங்களில தூக்க ஏலுமானதுகள அள்ளிக் கட்டிக்கொண்டு, விறுக்கு விறுக்கெண்டு முத்தத்தைக் கடந்து, தட்டிய விலத்திக் கொண்டு குசினிக்க உள்ளிடுறா.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

கொண்டந்ததுகள பக்குவமா [illegible] அடுப்புப்புகட்டில [illegible] சிட்டு சீலைத்தலைப்பால ஈரக்கையையும், வேர்த்தவையையும் துடைக்கிறா. பஞ்சியப் பாராமல் மற்றொரு வாட்டியும் கிணத்தடிக்குப் போய் சருவக்குடத்தோட திரும்பி



வாறா.

கோப்பையில அடிச்சு வைச்சிருந்த முட்டைக் கோப்பியை மூக்குப் பேணில ஊத்தி ," சூடுஆற முன்னம் குடிச்சு முடிக்கச் சொல்லி அம்மா நீட்டிறா. ஒரே முடரில அதைக் குடிச்சு முடிச்சிட்டு மூளேக்க குமிச்சு வைச்சிருந்த தேங்காயளில ஒண்டைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு மகிழ மரத்தடியைப் பார்த்து அக்கா நடையைக்கட்டுறா.


[illegible] மரத்தடியில தாட்டு வைச்சி [illegible] அலவாங்கில குடுத்துத் தெண்ட மட்டையள், வாழைப் பழத்தோல் உரியிற கணக்கா மளமளெண்டு களருது. மட்டையள உரிச்சு முடிய, முந்தின செத்தலோ அல்லது முட்டுக்காயோ எண்டு ஐம்மிச்சத் தோட காயைக் கிலுக்கிப்பாக்கிறா.

'முட்டுக்காயெண்டாலும் பறவாயில்லை, புட்டுக்குத்தானே' எண்டு மனசுக்க சமாதானப்பட்டுக் கொண்டு, கொடுவாக் கத்திய எடுத்து பொச்சைத் தட்டுறா. போர்த் தேங்காய் போல இல்லாமல் சோக்கான உருண்டையாய் அது இருக்கு. இடக்கையால அதை வளமாப் பிடிச்சுக் கொண்டு கத்தியின்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறவளத்தால ஓங்கி ஒரு போடு, அவ்வளவுதான். தேங்காய் சரி பாதியா ஈயெண்ட வாக்கில வாய்ப் பிளக்குது.

முன்னத்தம் பல்லால தேங்காய்ச் சொட்டை நன்னிக்கொண்டு, குசினிக் குந்தோட சாத்தி வச்சிருக்கிற திருவலையை எடுத்து வச்சுத் திருவத் துவங்கிறா. "முதல் நாள் தூறின மழைத் துமியில நனைஞ்சு போனதால விறகு தடியள் எரியமாட்டுதாம்" எண்டு குறைபட்டுக் கொண்டு அம்மா அடுப் போட அல்லாடுறா.



"ரெண்டு மட்டைய வச்சு மண்ணெண்ணையில கொஞ்சம் பருக்கி விடுங்கோ, பத்திப் பிடிச்சிடும்" எண்டு சொல்லிக் கொண்டு குசினீக்க வந்த சின்னம்மாள் மரக்குத்தீல குந்தியிருந்த வாக்கில அம்மாவைப் பார்க்கிறா.

அவ, பானையில மிஞ்சியிருக்கிற பழஞ்சோத்தை ஏப்பையால வழிச்சு கறிச்சட்டிக்க போட்டு, சின்ன வெங்காயத்திலையும் நாலைஞ்ச அரிஞ்சு போட்டு, கறி,சோறு எல்லாத்தையும் கடைஞ்ச மோர் விட்டுக் கலக்கிக் குடுக்கிறா. சின்னம்மாள் சூட்டடியோட தூக்கிக் கஞ்சித்தெளிவை உறிஞ்சிக் குடிக்கிறா. பச்சைக் கொச்சிக்காயைக் கடிச்சுக் கொண்டு பழஞ்சோத்தையும் வழிச்சுத் துடைச்சு மண்டுறா. "காந்தலா இருந்த வயிறு இப்பதான் இதமா குளுத்தியா இருக்கு" எண்டு சொல்லிக் கொண்டு ஏவறை விட்டபடி எழும்பிறா.

அவர், எல்லாத்திலையும் நூதனம் பாக்கிற ஒரு சாதியான ஆள், உந்தப் புட்டு, இடியப்பம் சங்கதியள் எல்லாம் அவருக்குத் தோதுப்படாது. "அப்பற்ற பரவணியில வந்த குணம். அவரையே உரிச்சுப் படைச்சுப் பிறந்திருக்கிறான். அவற்ற குணம்தான் அவனுக்கும்" எண்டு அம்மா அடிக்கடி சொல்லுவா.

குசினி வாசலால தம்பி வாற சிலமன் தெரியுது. பூளை சாறின கண்ணும் வீணீர் வடிஞ்ச கடவாயுமா நித்திரைப் பாயால எழும்பின சீருக்கு அமுதமணியமா வந்து நிக்கிற அவன்ர கோலத்தைப் பாக்க அம்மாவுக்குப் பத்திக்கொண்டு வருகுது.

"பலாப்பத்திப் பொழுது விடிஞ்சு எம்மட்டு நேரமாப்போட்டுது. இப்பான் எழும்பி வாறா. இன்னும் துரைக்கு நித்திரை முறியேல்லைப் போல, ஆளின்ர விறுத்தத்தைப் பாருங்குவோவன். தலை பறட்டை பத்திப்போய் பாண்டல் ஊத்தையோட சினி மணம் மணக்குது. போடா போய் முதலில தோஞ்சிட்டு வா.



சிரட்டோல உமிக்கரி கிடக்கும். அதையெடுத்து நல்ல வடிவா பல்லை மினிக்கி விளக்கி, கொப்புளிச்சிப் போட்டு, கிணத்துக்கட்டில அரப்பும் சீயாக்காயும் சுடவச்சு வச்சிருக்கிறன். அங்க சீனியம்மான் தோட்டத்துக்கு இறைச்சுக் கொண்டு நிக்கிறார். அவரிட்டச் சொல்லி, அதை நல்லாத் தப்புவிச்சு நாலு வாளி தண்ணியும் ஊத்துவிச்சு முழுகீற்று வா. அதுக்குப் பிறகுதான் கோப்பி பலகாரம் எல்லாம்" எண்டு பொரிஞ்சு தள்ளி தம்பியக் கலைச்சு விடுறா.

அடுப்பு மூண்டு பகார்பத்தி எரியத் துவங்கீற்றுது. புட்டுப்பானையில தண்ணிய ஊத்தி அடுப்பில ஏத்திக் கொதிக்க வைச்சிட்டு அம்மா நீத்துப்பெட்டிய எடுக்கக் கையுன்னிறா. "குழல் புட்டெண்டால் தானேயண அதுகளுக்குப் பிடிக்கும்" எண்டு அக்கா ஞாபகப்படுத்தினா. அவ புட்டுக்குழலை எடுத்து தட்டித் துடைச்சிட்டு புட்டுச்சில்லைப் போட்டு பானைக்கு மேல சிக்கரா இருத்திறா.

குழைச்சமாவையும் தேங்காய்ப் பூவையும் கைப்பழக்கத்தில கணக்கான அளவில மாறிமாறிப் போட்டு குழல் நிறம்பினாப்புறகு சிரட்டைப் பாதியால மூடிக் கவுக்கிறா. ஆவிவரவிட்டு புட்டுத்தள்ளிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டனால சுளகில புட்டைத் தள்ள, மணம் எழும்பிப் பசியக் கிளப்புது.

சம்பல் அரைச்சு முடிய, முதல்நாள் மிஞ்சின சுறாவ றைக்கறியச் சூடுகாட்டிறதில அக்கா முனைப்புக் காட்டிறா. காலைப் பலகாரம் செய்கிற வேலை ஒரு மாதிரி ஒப்பேறீற்றுது. அப்பையாவும் சீனிமாமாவும் தங்கிட அலுவல்களை ஏறக்கட்டீற்று, ஓவ்வொருத்தரா வந்து சாப்பாட்டுக் கடையை முடிச்சிட்டுப் போறபோக்கில, இறப்பில கட்டித் தொங்க விட்டிருந்த மொந்தன் வாழைக் குலையில கனிஞ்ச பழமா பாத்து ஆய்ஞ்சு சாப்பிட்டபடி நடையக் கட்டுவினம். " புட்டு பட்டணம் வரை தாங்கும்" எண்டு வயித்தத் தடவினபடி அப்பையா சொல்லுறார்.

கட்டக்கடைசியாத்தான் சின்னத்தம்பியும் தங்கச்சியும் சாப்பிட வருவினம். இரண்டு பேரும் சப்பாணி கொட்டிக் கொண்டு சாணியால மொளுகின நிலத்தில முக்கப்பணிய இருந்தபடி கதலிப்பழமும் சீனியும் போட்டுக் குழைச்சு புட்டை திரணை திரணையா அம்மா உருட்டிக்குடுக்க "ருசியா இருக்கு" எண்டு சொல்லிச் சொல்லி வீணி வடிய பொச்சுக் கொட்டிச் சாப்பிடுகினம்.

முதல் நாள் கடேல வாங்கின வாய்ப்பனும் சுசியமும் தேடுவாரில்லாமல் கொட்டப் பெட்டிக்க கிடந்து சீரழியுது. பூஞ்சணம் பிடிக்க முன்னம் ஆட்டுக்கெண்டாலும் போட்டுப் பாப்பம் எண்டு அக்கா எடுத்து வைக்கிறா.

இரவைக்கு தோசை சுடுறதோ அல்லது இட்டிலி அவிக்கிறதோ எண்ட தீர்மானம் இல்லாமல் ரெண்டுக்கும் தேவைதானே எண்டிட்டு அம்மா உழுந்தை ஊறப்போடுறா. " பின்னேரமா அரியதரமும் பணியாரமும் சுட வேணும். நேரம் இருந்தால் முறுக்கும் புழியலாம். பிள்ளையள் ஆசைப்படுதுகள். ராசவள்ளிக் கிழங்கும் கிடக்குது. அதையும் ஒரு நாளைக்கு சக்கரை போட்டு அவிக்க வேணும்" எண்டு அம்மா சொல்ல, கொடுப்புக்க சிரிச்சபடி அக்கா தலையத் தலைய ஆட்டுறா.

"எவரையும் கேட்காமல் இக்கட்டுரையை 'யாராவது முழுமையாக விளங்கிக் கொண்டால், அப்பாடா எம் தமிழ் எங்கோ வாழ்கிறது.. காத்திருக்கலாம்."


**மறைமுதல்வன்**

புகழ் பெற்ற இத்தாலிய ஓவியர் லியானார்டோ டாவின்சி ஒரு கையால் ஓவியம் வரைந்து கொண்டே மறு கையால் எழுதும் ஆற்றலைப் பெற்றிருந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கை ஆழியானின்

# ருத்ர தாண்டவம்



அக்கா..நம்ம தம்பிதனசேக ரன்..என்று அதே நேரம் மலர் சத்தமிட்டாள். மைதிலி நிமிர்ந்து பார்த்தபோது எதிரில் போராளியின் சீருடையில் தனசேகரன் தம்ளர் களைக் கரங்களில் ஏந்தியவாறு நின்றிருந்தான். சில கணங்கள் மைதி லியால் நம்ப முடியவில்லை. அவ னை இங்கு சந்திப்பாளென எண்ணி யிருக்கவில்லை.

தம்பி.. ஓடி வருகிற வழியிலை சுமதி வழிமாறிவிட்டாளடா. ரெண் டு பேரும் தான் வந்திருக்கிறம். என்ன செய்யப்போறமோ..?

பயப்பட வேண்டாமக்கா.. அவன் அவர்கள் அருகில் உரிமை யோடும் ஆதரவோடும் அமர்ந்தான்.

என்ன சக்தி? அவர்களுடன் நின் றிருந்த ஓர் இளைஞன் வினவினான்.

“இவை என்ர அக்காமார் என்ற தனசேகரன் மைதிலியைப் பார்த்து அக்கா அவர் மாறன் மற்றவன் சீலன். இயக்கத்தில என் பெயர் சக்தி....”

அவனைக் கண்டதும் இருவருக் கும் தெம்பு வந்தது. இனி எப்படியா வது சுமதியைக் கண்டு பிடித்துவிட லாம்.

“மல்லாவி பள்ளிக்கூடத்தைத் தான் டி.எஸ், அகதி முகாமாக்கி இருக்கிறார் எல்லாரையும் அங்க தான் தங்கவிடப்போறம். அங்கயும் தொடர்ந்து இருக்கலாமோ தெரிய வில்லை அக்கா.. நான் சுமதி அக்கா வைக் கண்டு பிடிக்கும் வரை மல் லாவி மகளிர் பொறுப்பாளர் வாணி அக்காவின்ர காம்ப்பில கொண்டு போய் விடுகிறன். அங்க பயமில்லா மல் இருக்கலாம். அது மல்லாவியில தான் இருக்கு..”

வெள்ளாங்குளத்திலிருந்த வர்கள் துணுக்காய்க்கு இடம்பெயர்ந் துவிட்டதான செய்தியை மாணிக்க ராசா மூலம் மணிசேகரன் அறிந்து கொண்டான். வெள்ளாங்குளத் திற்கு ஒரு தடவை மாணிக்கராசா வுடன் சென்று வந்தான். வெள்ளாங் குளத்தில் கல்கட்டிடங்களாக விளங் கிய கமத்தொழில் அபிவிருத்தி நிலையமும் கிராமப் பாடசாலை யின் பிரதான கட்டிடமும் குண்டு வீச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில் தகர்ந்திருந்தன. வெள்ளாங்குள மக்கள் இடம் பெயர்ந்தமையை அவை நியாயப்படுத்தின.

அவர்கள் இடம்பெயர்ந்த துணுக்காய்க்குச் சென்று ஒரு தடவை அவர்களைப் பார்த்து வரவிரும்பியும் மனதை அடக்கிக் கொண்டான். மாணிக்கராசா ஒரு தடவை லீவு எடுத்துக் கொண்டு துஞுக்காய்க்குச் சென்று வந்தான்.

வெள்ளாங்குள மக்களில பெரும்பாலானோர் துணுக்காயில தான் தங்கியிருக்கினம். அங்க ஏ.ஜி.ஏ, அகதிகளிருக்க மல்லாவிப் பள்ளிக் கூடத்தில முகாம் ஒண்டு போட்டிருக்கிறார். அங்க தங்கச்சிமார் இல்லை. தம்பி தனசேகரன் மைதிலியையும் மலரையும் கண்டு தன்னோடை கூட்டிக் கொண்டு போட்டானாம். விசாரித்துப் பார்த்தன் எங்கை எண்டு தெரியவில்லை. தம்பி அழைச்சுப் போனதால ஆறுதலாக இருக்குது. இடையில் சுமதி பாதை தவறி மல்லாவிப் பக்கமாகப் போனவையோட போனாளாம். தேடிப் போனன் அவளைக்கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் முறங்காவில் பிள்ளையார் கோவிலடியில் மச்சான் மகேந்திரனைக் கண்டன். பொன்னப்பா அம்மானும் பவானியும் அவருக்குத் தெரிந்த சினேகிதர் வீட்டில தங்கியிருக்கினம். அம்மானுக்கு முன்பு பழக்கமான வீடு. சுமதியைப் பற்றிச் சொல்லி இருக்கிறன். தங்கச்சிமாரைக் கூட்டிக்கொண்டு வந்து தங்களுடன் விட்டுவிடும்படி அம்மான் கத்துகிறார். அவர்களை எங்கையெண்டு தேடுகிறது?

" சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லையே?".

"எல்லாருக்கும் கஷ்டம் தான்.. வருத்தம் வந்தால் துணுக்காய் வைத்தியசாலையில் மருந்துகளில்லை. மல்லாவிக்கு அல்லது மாங்குளத்துக்குத் தான் போகவேணும். முகாமில பிள்ளையளுக்கு காய்ச்சல், வயிற்றோட்டமாம், மழை வேறை. சுகாதார வசதிகளுமில்லை. மாமா ஆக்கள் ஒரு வீட்டில இருக்கிறதால சமாளிக்கினம் ரெண்டு மூண்டு நாளில திரும்பி ஊருக்கு வரலாமெண்டால் வெள்ளாங்குளத்துக்குத் தானே ஷெல் அடிக்கிறான்கள் பாவிகள் போற பாதையோரம் எல்லாம் இடம் பெயர்ந்த சனம். மர நிழல்களில சீலைகளால மறைப்புச் செய்து போட்டு வாழுதுகள்.. தண்ணி வசதியில்லை. ஆமான கழிப்பிடம் இல்லை குழந்தைகளுக்குப் பால் மா இல்லை போற பாதையில் அடக்கம் செய்யப்படாது கிடக்கிற சடலம் ரெண்டைப் பார்த்தன். சூடு பட்டுச் சிதறிக்கிடக்குது. சாப்பாடு ஒழுங்காகக் கிடைப்பதாகத் தெரியவில்லை. தொண்டர் நிறுவனம் ஏதாவது கொடுத்தால் சரி. மாற்றுடுப்பில்லை...."

இறுதியில் மாணிக்கராசா சொன்னான். "நான் லீவில போக இருக்கிறன் சேர். தங்கச்சிமாரைத் தேடிப்பிடித்துக் கூட்டிக்கொண்டு முழங்காவில் போகப்போறன் இருக்கிறதுகளையாவது காப்பாத்துவம் என்று அம்மான் நினைக்கிறார். வருகிற நல்ல நாளில் எனக்கும் பவானிக்கும் கலியாணத்தை முடிக்கப்போறார். ஊருக்குத் திரும்பிப் போய் வைப்பம் எண்டிருக்கிறம். மைதிலித் தங்கச்சிக்கும் மகேந்திரனுக்கும் அதோடு ஒண்டா கலியாணத்தைச் செய்திடலாமெண்டிருக்கிறம்."

இந்தச் செய்தி மணிசேகரனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. மைதிலியை ஒரு தடவை சந்தித்து பெற்றாரின் மனதை மாற்றி விரைவில் கலியாணம் செய்துகொள்வதாகக் கூறிக்காத்திருக்குமாறு சொல்லக் எண்ணியிருந்தான் அதற்குள் மாணிக்கராசா சொன்னசெய்தி நிலை குலைய வைத்தது.

"மைதிலி இதுக்கு ஒப்புக் கொண்டாளா?"

மாணிக்கராசா மணிசேகரனை வியப்புடன் ஏறிட்டான்.

"ஏன் கேக்கிறியள் சேர். எங்களைப்போல ஆக்களுக்கு ஒண்டுக்கை ஒண்டு தானே செய்து வைப்பம்.. சீதனம் பாதனம் கொடுக்க வழியிருக்கா? பெரிய உத்தியோகத்தரையா எதிர்பார்ப்பம்.. கமக்காரன் கடைக்காரனைத் தவிர.. மகேந்திரன் ஊரில காணி, பூமி உள்ளவன். ஒரு போகம் வயல் செய்தாலே ஒரு வரியம் கால் நீட்டிக்கொண்டு சாப்பிடலாம். எங்களை மாதிரியே சேர்.. மைதிலி ஒப்புக்கொண்டு விடுவாள் என்றே நினைக்கிறன்... மகேந்திரனுக்கு என வளர்ந்தவள் தானே சேர். என்றான் மாணிக்கராசா.

அம்மாவின் கடிதம் வந்திருந்தது. வீட்டில் எதுவும் நடவாதது போல அம்மா கடிதம் எருதியிருந்தாள். எப்போது யாழப்பாணம் வருவதாகக் கேட்டிருந்தாள். அவனுடைய கலியாண எழுத்துக்கு நாள் வைப்பதற்காக அவள் காத்திருப்பது போலப்பட்டது. மணிசேகரின் மனம் கொந்தளிக்கத் தொடங்கியிருந்தது. மைதிலி என்ற கிராமத்துச்



ஏன் காதலர்கள் எப்பவும் பொய்யே பேசுறாங்க???

அவங்க மெய்மறந்து காதலிக்கிறவங்களாச்சே!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதுவாதறியாத பெண்ணை ஏமாற்றிவிடுவதா என்ற எண்ணம் பெரிதாகத் தலைதூக்கியிருந்தது. அவளுடைய அன்றைய மனநிலையைப் புரிந்து கொள்ளும் நிலையிலும் அவனில்லை. மகேந்திரனைக் கலியாணம் செய்து கொள்ள அவள் தயாராகி விட்டாளா மைதிலியை நான் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று கூறுவதற்கு அவனால் முடிந்திருக்கவில்லை.

மைதிலியைத் திருமணம் செய்து கொள்வதால் அவன் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அவனை நம்பிக் காத்திருக்கின்ற தங்கைமாரின் பிரச்சினைகள் ஒருக்காலும் தீராது. மைதிலியை மறந்துவிட வேண்டியது தான் என்று அவன் முடிவு செய்த போதுதான் யாழ்ப்பாணத்திலிருந்து அம்மாவின் கடிதம் வந்திருந்தது. பணிமனையில் லீவு எடுத்துக் கொண்டு அவன் யாழ்ப்பாணம் புறப்பட்டான்.

காட்டுப் பாதையில் நள்ளிரவில் இனியும் அவர்களால் நடக்க முடியாது. கால்கள் வலியெடுத்தன. அலியன் யானைக்குப் பயந்து வழி மாறி ஓடி வந்தவர்களோடு சுமதியும் அள்ளுண்டு வந்துவிட்டாள். அது எவ்வாறு நிகழ்ந்தது, எப்படி நிகழ்ந்தது என்பதை அவளால் கிரகிக்க முடியவில்லை. சகோதரிகளைப் பிரிந்து எப்படி ஓட முடிந்தது என்பதையும் எண்ண முடியவில்லை. பயந்து ஓடி



வந்த களைப்பு வேறு தண்ணீர்த் தாகத்தை ஏற்படுத்தியது. வழியில் ஓரிடத்திலும் நீர் நிலைகள் குறுக்கிடவில்லை.

அக்கூட்டத்தில் பதினாறு குடும்பங்கள் இருந்தன. இளம் வயதுப்பிள்ளைகளும் கூடவே இருந்தனர். குழந்தைகள் இடையிடையே பசியால் அழுதன. ஒரு பெரிய மரத்தினடியில் தங்கிக் கொண்டார்கள். அவர்கள் அடைக்கலம் புகுந்தவிடம் எதுவெனத் தெரியவில்லை. குடி மனைகள் அருகில் இருப்பது போன்ற அசமாட்டங்களுமில்லை.

'இவ்விடத்தில கொஞ்ச நேரம் தங்கி இளைப்பாறிவிட்டு நடப்பம். நாங்க மேற்குப் பக்கத்தால மன்னார் பூநகரி றோட்டையும் கடந்து வந்திட்டம் போல இருக்குது.. இப்படியே போனால் நாச்சிக்குடாவுக்குத் தான் போவம்..'

'அப்ப நாங்க திரும்பிப் போவம்..'

தூரத்தில் செல்கள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

'இனித்திரும்பிப் போக முடியாது.. இப்படியே போவம். நாச்சிக்குடாவில் படகு ஏதாவது அகப்பட்டால் அதில கௌதாரி முனைக்குச் செல்வம் வாருங்கோ.. மெல்ல மெல்ல நடப்பம்.'





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுமதிக்கு இடி விழுந்தது போல இருந்தது. பதினேழு வயது இளம் பெண். தனித்து விட்டாள். அவர்களோடு நடந்து செல்லாது இந்த இருட்டில் நடுக்காட்டில் தனித்து நிற்கவோ திரும்பிச் செல்லவோ முடியாது. பாதை தெரியாத காடு. அவள் ஊரவர்கள் அவர்களில் உள்ளனர். யார் யார் உள்ளனரென விடிந்ததும் தான் தெரியவரும்.

விடிகின்ற வேளையில் அந்தக் கூட்டம் நாச்சிக்குடாவை அடைந்தது. கடற்கரைக் கிராமம் அது. அந்தக் கிராமமும் வெறிச்சோடிப் போயிருந்தது. ஆனால் அக்கிராமத்தின் மத்தியில் காணப்பட்ட பெரிய ஆலின் கீழ் பலர் சுருண்டு படுத்திருந்தனர். அதன் அருகிலிருந்த பொதுக்கிணற்றில் வாளியால் அள்ளி விடாயை அவர்கள் முதலில் தீர்த்துக் கொண்டனர். நடந்து வந்தவர்கள் பொத் பொத் தென அம்மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டனர்.

சுமதி அப்படியே தரையிலமர்ந்தாள். அவள் அருகில் ஒரு குடும்பம் அமர்ந்து கொண்டது. சற்றுத் தள்ளி ஓர் இளைஞன் மண்ணில் படுத்திருந்தான். அவர்களுக்கு முதலோ அங்கு வந்தவர்கள் வெள்ளாங்குளத்திருந்து வந்தவர்களாக இல்லை.

'எங்கிருந்து கிழக்கால வாறியள்?' படுத்திருந்த இளைஞன் கேட்டான். சுமதி பேசாதிருக்க அவளருகிலிருந்த குடும்பஸ்தர். 'வெள்ளாங்குளத்திலருந்து வாறம். தம்பி' என்றார்.

வெள்ளாங்குளத்திலிருந்தோ?

வழியில குறுக்கிட்ட ஓர் சனியன் யானை திசை திருப்பிப் போட்டுது நீங்கள் எங்கிருந்து வாறியள்?

நான் தெற்கே விடத்தல் தீவு மற்றவங்க வலைப்பாடு பிரதேசங்களிலிருந்து வந்திருக்கிறாங்கள். அது சரி நீங்க எல்லாரும் படகுகளிலே ராமேஸ்வரம் போகப்போறியளே? அந்த நோக்கில கடற்கரைக்கு வந்திருக்கிறியள் போல இருக்குது. ராத்திரி நாலு படகு போயிட்டுது. படகில இடமில்லை. ராவைக்கு வருவாங்கள்.. கொண்டு போக.. ஆளுக்கு நாலாயிரம் ஐயாயிரம் என்டு வாங்குறாங்கள். காசில்லாவிட்டால் நகைகளும் வாங்குறாங்க.

நல்லதாய்ப் போயிட்டுது.. இனி இவங்களோட இங்கு வாழ முடியாது. இந்தியாவுக்குப் பிள்ளை குட்டிகளோடு ஓடித்தப்புவம். உசிராவது மிஞ்சும். என்று அவனை ஆமோதித்தாள் அக்குடும்பத்திலிருந்து நடுத்தர வயதுப் பெண். சுமதிக்கு இவற்றைக் கேட்கப் பயமாயும் திகைப்பாயும் இருந்தது. இவள் என்ன செய்யப்போகிறாள்? எங்கு போவது? சகோதரிகளோடு எப்படிச் சேர்வது?

விடிந்துகொண்டிருந்தது.

ஒருவரையொருவர் முகம் பார்க்க முடிந்தது. சுமதிக்குப் பக்கத்தில் வந்திருந்த குடும்பத்தில் பெற்றோரும் மூன்று பிள்ளைகளும் இருந்தனர். அவர்களை அவள் அடையாளம் கண்டு கொண்டாள். அவள் குடும்பத்துடன் நெருக்கமான கனகசபையின் குடும்பத்தினர். அவரின் வயலும் சுமதியின் தகப்பனின் பக்கத்துக் காணி. ஒரு ஒழுங்கை தள்ளி அவர்களின் வீடு இருந்தது.

எட நமது முருகேசரின்ர பொடிச்சி.. கடைசிப் பொடிச்சி. .நீ ஒண்டுக்கும் பயணப்படாதை மோனை. அக்காமார பிரிஞ்சு போச்சினம் என்டு பயப்படாதை. நாங்க துணையிருக்கிறம். நீ எங்களின்ர பிள்ளைமாதிரி இருக்கலாம்.

கனகசபையின் பேச்சுக்குப் பின்னர சுமதிக்குத் தெம்பு வந்தது.

அன்று அதிகாலை வானத்தில் கிபீர் பொம்பர்கள் இரண்டு வட்டமிட்டு நோட்டம் பார்த்தன. அகதி மக்கள் பயத்துடன் மரங்களுக்கிடியில் தம் இருப்பை மறைத்துக் கொண்டார்கள். அப்பிரதேசத்தைவிட்டு விரைவில் அகன்றுவிடும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. தமிழ்நாட்டுக்கு அன்றிரவு சென்றுவிடப் பலரும் திடமாக முடிவெடுத்தனர்.

அக்கிராமத்தில் ஓடாது எஞ்சியிருக்கின்ற மக்களில் சிலர் கிடாரம் வைத்து மத்தியானம் அளவில் அடுப்பு மூட்டினர்.

நாங்களும் ஓடப்போறம் போறதுக்கிடையில் கஞ்சி காய்ச்சித் தந்திட்டுப் போறம். அந்த சாப்பாடு எப்ப கிடைக்குமோ தெரியாது..

இடை நேரத்தில் சுமதியும் அந்த இளைஞனும் சகயமாகப் பேசிக்கொண்டார்கள்.

என் பெயர் மைக்கல் என்றான் அவன்.

நீங்கள் என்ன ஒரு கொப்பி வைச்சு ஏதோ கீறிக்கொண்டிருக்கிறீர்கள்.. என்ன ஒரு புத்தகம் வைச்சிருக்கிறியள்?

மைக்கல் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

'எனக்கு சித்திரம் வரையிறதில சின்ன வயசில இருந்து வலு விருப்பம். நாங்க இடம் பெயர்கின்ற அவலங்களை உணர்ந்தவாறு கோட்டு வரையங்களாகக் கீறுகிறன். வேணுமெண்டால் பாருங்கள்..'

அவன் கொப்பியை அவளிடம் நீட்டினான். அவள் பக்கங்களை விரித்தாள். சாரைசாரையாக அகதிகள் செல்கிறார்கள். பசிக்காக அகப்பட்ட காட்டுப் பழங்களைத் தின்று மயங்கிச்சோரும் பிள்ளைகள். மரத்தடியில் நோய்வாய்ப்பட்டு மருந்தின்றி முடங்கிக் கிடக்கும் வயோதிபர்கள்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நடக்க முடியாத தந்தையைக் கரங்களில் ஏந்தி நடக்கும் மகன். குண்டுகள் சிதறிய பிரதேசத்தில் உதிர்ந்து கிடக்கும் மனித சடலங்கள். குவியல் குவியலாகக் கிடக்கும் மனித உடல்கள். மனித இறைச்சியை ருசி பார்க்கும் பட்சிகள்.. செத்து விழுந்து கிடக்கும் மாடுகள். மரக்கிளைகளில் தொங்கும் செத்த குரங்குகளின் சடலங்கள். சேலைகளை மறைப்பாக்கி வாழும் குடும்பம் ஒன்று .. அவளால் அவற்றைத் தொடர்ந்து பார்க்க முடியவில்லை. கொப்பியை மூடி அவனிடம் திருப்பிக் கொடுத்தாள்.

'கொடுமை..கொடுமை'

'இவை அனைத்தும் நேரில் நான் கண்டவை... இது என்ன புத்தகம் என்றா கேட்டியள்?' பைபிள்.. எமது வேதம் நான் ஒரு பாஸ்ரர். இறை ஊழியம் செய்பவன். பாதர் மாதிரி என்று வைத்துக் கொள்ளுங்கள்.'

சுமதி அவனை மதிப்போடு பார்த்தாள்.

'நான் கவிதைகள் எழுதுவேன் நன்றாக இசைப்பாடல் பாடுவேன். சிறுகதைகளும் எழுதிப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. உருவகக் கதைத் தொகுதி ஒன்று வெளிவந்திருக்கின்றது.. எல்லாத்துக்கும் மேலாக. பயப்பட வேண்டாம் நான் போராளியாக இருந்து விலகியவன்'

'ஆ..'என வியப்பைக் காட்டினாள் சுமதி.

'என்னை மாற்றியக்கத்தினரும் இலங்கை இராணுவமும் தேடுகின்றன. அவற்றிலிருந்து தப்புவதற்காக ராமேஸ்வரம் ஓடுறன்." என்று சிரித்தான் மைக்கல்.

**-தொடரும்-**








**காய்கறி பேஷியல்**

# ஆண்கள் அழகாவதற்கு சில டிப்ஸ்



முகத்தை முதலில் காய்ச்சாத பாலால் துடைக்கவும். முட்டைக் கோஸை பச்சையாக மசித்து வைத்துக் கொள்ளவும். இது தவிர அதில் கொஞ்சம் சாறும் எடுத்து வைத்துக் கொள்ளவும். முட்டைக் கோஸ் மசித்ததைக் கொண்டு முகத்துக்கு மசாஜ் கொடுக்கவும். இடையிடையே முட்டைக் கோஸ் சாறை விரல்களில் தொட்டுக் கொள்ளவும். பதினைந்து நிமிடங்கள் கழித்து ஈரமான பஞ்சால் முகத்தைத் துடைத்து விட்டு முட்டைக்கோஸ் விழுது, பால், மற்றும் தேன் கலந்த பேக் போடவும். பருக்கள் இல்லாதவர்கள் என்றால் பத்து நாட்களுக்கொரு முறையும் செய்து கொள்ளலாம்.

குங்குமப் பூ சாப்பிட்டால் நிறம் கூடுமா? என்பது பலரது சந்தேகம். அதை அப்படியே பாலில் கலந்து குடிப்பது பலன் தராது. சுடான பாலில் குங்குமப் பூவைப் போட்டு கால் மணி நேரம் அப்படியே ஊறவிட வேண்டும். அது வெதுவெதுப்பாக மாறி மஞ்சள் நிறத்துக்கு வரும் போது குடிப்பது தான் பலன் தரும்.

ஆயுர்வேதக் கடைகளில் சுத்தமான குங்குமாதி தைலம் கிடைக்கும். அதை வாங்கி கொஞ்சம் பாலுடன் கலந்து வாரம் ஒரு முறை முகத்துக்கு மசாஜ்செய்து வந்தால் நிறம் நிச்சயம் கூடும். மசாஜுக்குப் பிறகு அரைத்த சந்தனத்தில் பால் கலந்து பேக் போட வேண்டியது முக்கியம். வெயிலில் செல்கிறபோது எஸ்.பி.எவ் .ப் 20 முதல் 30 வரை உள்ள சன் ஸ்கிரீன் உபயோகிப்பது மோட்டார் பைக்கில் செல்கிற போது கைகளுக்கு கிளவுஸ் அணிவது நிறைய பச்சைக் காய்கறிகள் பழங்கள் இளநீர் பால் தயிர் சாப்பிடுவது போன்றவையும் நிறத்தை மேம் படுத்த நினைப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷ யங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் உத்தியோகமும்




ஓட்டோவிலிருந்து இறங்கி

கமலா - என்ன கவிதா இன்டர் வியூக்குப் போனியோ.... என்ன நடந்தது?..

கவிதா - இன்டர்வியு நல்லாத்தான் போச்சுது மாமி. கேள்விகள் எல்லாத்துக் கும் நல்லாத்தான் பதில் சொன்னனான். அந்த வேலைக்கேத்த படிப்புத் தகமைக ளும் எனக்கிருக்கு.

கமலா - பேந்தன்ன. இந்த வேலை கிடைக்கிறதுக்கு நல்ல வாய்ப்பு இருக்கு தெண்டு சொல்லு.

கவிதா - அதுதான் இல்லை மாமி. இப்பிடி எத்தனையோ இன்டர் வியூக்க ளுக்குப் போட்டு வந்திட்டான். பொம் பிளை எண்டால் எவ்வளவு தகுதி இருந் தாலும் நல்ல வேலை எடுக்கிறது கஷ்ட மாத்தான் இருக்கு.



கமலா - ஏன்.... ஏன் அப்படிச் சொல் லுறாய் கவிதா.

கவிதா - பின்னை என்ன மாமி. கலியாணம் முடிச்சால் தொடர்ந்து வேலைக்கு வருவியோ பிள்ளையள் பிறந்தால் எப்படிச் சமாளிப்பாய் எண்டு எல்லாம் கேக்கினம். ஆம்பிளையளி ட்டை உப்பிடியெல்லாம் கேக்கமாட்டின மெல்லே மாமி. நான் கட்டாயம் தொடர் ந்து வேலை செய்வன் அதுக்கேற்ற மாதிரி வாழ்க்கையை அமைச்சுக் கொள்ளுறவன் எண்டு சொன்னாலும் நம்புகினமில்லை.

கமலா - ஓ நானும் பாத்திருக்கிறன்..

கவிதா - இதை எப்படி மாமி தீர்க்கிறது? விஷயம் தெரிஞ்ச நீங்கள் சொல்லுங்கோ மாமி..

கமலா - நான் சொல்லுறதைக் கவ னமாகக் கேள் கவிதா... ஒவ்வொரு அலுவலகத்திலையும் 50 வீதமாவது பெண்கள் வேலை செய்யவேணும் எண்ட சட்டத்தைக் கொண்டுவர வேணும். அது இல்லை... உன்னட் டைக் கேட்டமாதிரி இடக்கு முடக்கான கேள்விகளை இன்டர்வியுவுக்கு வாற பொம்பிளையளிட்டை கேக்கிறது சட்டத் துக்கு மாறானது எண்டு சட்டம் வர வேணும்.

கவிதா - இதென்ன கதைக்கிறியள் மாமி.... இப்பிடிப்பட்ட சட்டங்கள் வந்தால் இந்த நிலமை மாறுமே.

கமலா - பொம்பிளையளும் கொஞ்சம் மாறவேணும் பார். வீட்டுப் பொறுப்புக்க ளைப் புருஷனோட பங்கிட்டு உத்தி யோகத்தில வருகிற பொறுப்புக்களைத் துணிவா எடுத்து செய்து காட்டப் பழ கோணும்.. பொம்பிளையள் உத்தியோக உயர்வைக்கூட விரும்பிறேல்லைத் தெரி யுமோ. ஏனெண்டால்... கூடப் பொறுப் புக்கள் வந்தா வீட்டு வேலையைப் பாக்க ஏலாமல் போகுமெண்டு..

கவிதா - ஓம் மாமி. அதோட கட்டுப்பெட்டி யாக இல்லாமல் நாங்களும் துணிஞ்சு தனியே போய் ஓடியாடிக் காரியங்கள் செய்து காட் டவேணும்... அப்பா விடமாட் டார்.. வெளியில போய் அலுவல் பாக் கிறது அவருக்கு விருப்ப மில்லை எண்டு இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தா மானேஜ்மன் டுக்குக் கரைச்சல்தானே..

கமலா - இரண்டு பக்கமும் பொறுப்பி ருக்கு கண்டியோ....

கவிதா - அப்ப என்னதான் செய்யலாம் ெண்டு சொல்லுங்கோ மாமி..?

கமலா - உத்தியோகம் பொம்பிளை இலட்சணம் எண்டு ஒரு புதுப் பழ மொழியை நாங்க உருவாக்கோணும்... பொம்பிளையளுக்கும் தொழில் சார்ந்த அபிலாஷைகளும் இலட்சியங்களும் தேவை. அப்படி அவையள் சிறு வயது முதல் வளர்க்கப்படவேணும்.. அப்படி யாக விழிச்சுக் கொண்டினம் எண்டா பிரச்சினை தீர்ந்தமாதிரித்தான்.

கவிதா - சரியாகச் சொன்னீங்கள் மாமி .. ஒரு லெக்சரே அடிச்சிட் டியள். இப்ப நீங் கள் சொல்லுறது நல்லா விளங்குது.


கமலா மாமியின் வீட்டுக்குள் நுழைகி றாள் கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு முகாம்கள்

-தமிழ் நதி-



சூரியன் மஞ்சளாய் சரியும்வேளையில்
கொலைக்களத்திலிருந்து புறப்படும் இராணுவ வாகனங்கள்
உயிருள்ள பிணங்களை
வீதியோரத்தில் கொணர்ந்து கொட்டுகின்றன.
இரவானதும்
தடுப்பு முகாம்களின் கம்பிவேலிகளுள்
இடமாற்றப்படுகின்றவர்களின்
அகல விரிந்துறைந்த கண்களுள்
விழுந்து கொண்டிருக்கின்றன
சடலங்கள் மேலும் பல சடலங்கள்

'மீட்கப்பட்டவர்களை'ஒளியிழை நாடாக்கள்
அவசரமாய் விழுங்குகின்றன.
நியாயப்படுத்தல்களுக்கு
முற்கூட்டியே தயாராயிருக்கும் பெருந்தகையீரின்
நிறைவான தலையசைப்பினை
புகைப்படக்காரனே! கவனத்திற் கொள்க.
ஒரு குழந்தையை கிச்சுக்கிச்சு மூட்டியேனும் சிரி
உணவருந்திக்கொண்டிருக்கும்
வயோதிப மாதொருத்தியின்
நன்றிப்பெருக்கில்
குவியட்டும் கமெராக்கண்.

கம்பிச்சுருள்களாலும் ஆட்காட்டிகளாலும்
வடிகட்டப்பட்ட சொற்களிலிருந்து
மகனைக் குறித்தொரு
தகவலும் கிட்டாமல்
நடைதளர்ந்து திரும்புகிறாள் தாயொருத்தி!

விசாரணைக்கென அழைத்துச்செல்லப்படும்
தேவதைகளின் முன்
முதலில் நீட்டப்படுவன துப்பாக்கிகள்
பிறகு....
உளியாய் பிளந்திறங்கும் குறிகள்!

தடுப்புமுகாம் சுவர்களின் சுற்றளவுக்குள்
தாயக எல்லைகளைச் சுருக்கிவிடும் சிரிப்பு
கன்னக்கதுப்புள் ஒளிந்திருக்க
தொலைக்காட்சியில் அழுதுவடிகின்றன நரிகள்.

அகதிகளை முன்னிறுத்திப் பிச்சையெடுக்கும்
அரச நிருபத்தை
கவனமாய் மிகக் கவனமாய்
பரிசீலித்துக்கொண்டிருக்கிறது சர்வதேசம்.



நன்றி : உயிரோசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடி... கடி...



என்ன சேர் இன்டர்வியு பண்ணாம முகத்தயே பார்த்துக் கொண்டிருக்கிறீங்க???

இது நேர்முகதேர்வு தம்பி ..



உங்கட படத்தில வசனங்களெல்லாம் கிணத்துக்குள்ளயிருந்து கேக்கிற மாதிரி இருக்கே ஏன்???

எல்லாம் அவ்வளவு ஆழமானவசனங்கள் சேர்...



ஆசிரியர்: கலிங்கத்து ராஜா கோட்டை கட்டினார்.. ஷாஜகான் தாஜ்மஹால் கட்டினார்.. சோழ ராஜா என்ன கட்டினார்???

மாணவன்: வேட்டி சேர்...



டீச்சர.. என்ர தலையில எதுவுமே ஏறாது எண்டு சொன்னீங்களெல்லா?

ஓமடா..

அதுக்கென்ன இப்ப நல்லாப் பாருங்க. ஒரு எறும்பு ஏறிக்கொண்டு இருக்குது




டொக்டர்.. எனக்கு கண் சரியா தெரியேல்ல. கண்ணாடி போடோணுமெண்டு நினக்கிறன்.

சரியா சொன்னீங்க. இது பாங்க். ஹொஸ்பிட்டல் பக்கத்தில இருக்கு



டொக்டர் எனக்கு கோபமே வருகுதில்ல. யாரைப் பாத்தாலும் எதைப் பாத்தாலும் சிரிச்ச முகமாவே இருக்கிறன். அதுக்கு ஏதாவது மருந்து குடுங்களேன்.

கவலைப்படாதீங்க.. அதுக்கு நான் என்ர பில்லைத் தாறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருநல் நினைவுகள்

# நவமும் நானும்

### கவிஞர் திமிலைத் துமிலன்

நீலாவெளி நவரத்தினம் எங்களோட ஒண்டாப் படிக்காட்டியும், வந்தவுடனே வலியவந்து என்னோட பழக்கமானவன். காரணம், என்ட எழுத்துத்துறை ஈடுபாடுதான். காலகதியில நாங்க நெருக்கமான நல்ல நண்பர்களானோம். அது மட்டுமில்ல, அவன் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையிட சீடன் எண்டு சொல்லுற அளவு இளமையிலருந்தே அவரோட வாழ்ந்தவன். மற்ற நண்பர்களை விட "கிருஷ்ணா, கிருஷ்ணா" வெண்டு என்னோட உயிராக இரிப்பான். என்ட குடும்பத்தில ஒருவன் எண்டளவு அவ்வளவு நெருக்கம். மற்றொரு அம்சம் அவனும் மரக்கறிக்காரன், நானும் மரக்கறிக்காரன். அமைதிப்போக்கு. தமிழ் மொழியில இருவருக்கும் அளவு கடந்த பற்று. இந்த நெருக்கமான உறவு ஆசிரிய கலாசாலையோட மட்டும் நிக்கல்ல. அதையும் கடந்து பல்கலைக் கழகப்படிப்பு வரை மட்டுமில்ல, வாழ்நாள் முழுக்கத் தொடருமெண்டு நம்மவச்சது. அப்படித்தான் நான் நம்மினன். அவனும் கூடத்தான்.

என்ட ரெண்டாம் வருடக் கற்கையின் போதுதான், அவன் முதலாம் வருடத்தில வந்து சேந்தான். எங்களுக்கு பயிற்சி நெறி முடியும் தறுவாய் நான் கட்டிலில தனியாக அமைதியாகப் படுத்திருந்தான். அவன் வந்து கட்டிலுல பக்கத்தில இருந்தான். "கிருஷ்ணா, ஒரு விஷயம், உங்களால செய்ய முடியுமா?"

"என்ன?" எண்டு நிமிந்து பாத்தன். "ஒரு கதை, காதல் கதை, அதை ஒரு நாடகமாக எழுத வேணும். கதையை முதலுல சொல்லுறன் கேளுங்க, இது கற்பனைக் கதையில்ல உண்மையில நடந்தது. ஆருக்குமில்ல என்னோட நெருக்கமான ஒரு பொடியனுக்கு. அவன் அதை நாடகமாக எழுதவேணுமெண்டு ஆசைப்படுறான்" எண்டவன் கதை சொல்லத்துவங்கினான்.

"இவன் ஒரு பிராமணப் பொடியன். இவன்ட வீட்டுக்குப் பக்கத்தில ஒரு சிங்களக் குடும்பம் இருந்தது. இவன் பந்து விளையாடக்குள்ள அந்த வளவுக்குள்ள பந்து போய் விழுற வழக்கம். இவன் போய்ப் பந்தை எடுக்கிறதும் வழக்கம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவன் சின்னப் பொடியனாயிருந்
தாலும் அழகானவன். அந்த வீட்டில
இருந்த குமர்ப் பொட்ட இவனோட
நல்ல விருப்பம். இவனைக் கூப்பி
ட்டு வச்சிக் கதைப்பாள். இது சில
வருடங்களாகத் தொடந்தது. அந்தச்
சிங்களத் தாயும் தகப்பனும் இல்
லாத நேரத்துல மணிக் கணக்காக
இந்தப் பெடியன் அவளோட
இருப்பான். இவனை லேசில
அவள் விடமாட்டாள். கூப்பி
ட்டு அணைச்சிக் கொஞ்சு
வாள். இது தொடர்ந்தது.
காலம் பொடியனை கட்டிளை
ஞனாக ஆக்க முனைந்த நேரம்,
அவள் தளதளவெண்டு தளம்பி நிக்
கும் பருவம். இவன் இளம் குருத்து.
ஆனாலும், அவள் இவனை வளைச்
சிப் போட்டாள். தனது இச்சையை
அவன் மூலம் தீர்க்க முற்பட்டாள்.
காலகதியில அதுவும் நிறைவேறி
யறு. காலவோட்டத்தில் வயது வித்
தியாசமே மறந்து போய்க் காதல்
வயப்பட்டுக் களித்தனர். ஆரம்பத்
தில் இதை யாரும் கவனிக்கவி
ல்லை. இவன் இன்றி அவள் இல்
லையென்ற நிலைக்கு உறவு முற்றிய
போது, அவள் பெற்றோருக்கு இது
தெரிய வந்தது. உடனே அவர்கள்
அவளுக்கு ஒரு பெரிய உத்தியோகத்
தனைப் பேசி முடித்தனர். அதன்
பின்பும் கூட அவள் இவனை விட்ட
பாடில்லை. தருணம் பார்த்து இவ
னோடு தொடர்பு வைத்துக் கொண்
டாள். அதே நிலையிலேயே இவ
னும் இப்போது வயப்பட்டிருந்
தான். அவள் கணவனுக்குக் குழந்தை
கள் பெற்ற பின்பும் இது தொடரத்
தான் செய்தது. இதையறிந்த அவள்
கணவன் தன் ஊருக்கு அழைத்துச்
சென்றான். அப்போதும் கூட இவர்க
ளது உறவு முறியவில்லை. அவளைத்
தேடிச் சென்று கள்ளமாகச் சந்தித்துத்
தழுவுகிறான். இவன் அவளில பைத்
தியமாக இருக்கிறான். அவளும்
அப்படியே. அவளுக்கு வயதேறி,
குழந்தை குட்டிகளோடு வாழும்
நிலையிலும் இந்த இளைஞன் அவ
ளை வெறுப்பதாக இல்லை. எப்
போது அவளை அனுபவித்தாலும்
அவளை முதன் முதலாக அனுபவி
த்த அதே நிறைவு பெறுவதாகக்
கூறுகிறான். அவள் புத்தம் புதியவ
ளாகவே இவனுக்கு எப்போதும்
அனுபவம் தருவதாகக் கூறுகிறான்.
இது எங்கு போய் முடியப் போகி
றது? இவனால் அவளை மறக்க
முடியவில்லையே!"

எண்டு அந்த இளைஞன்ட அற்பு
தக் காதல் கதைக்கு வினாவொன்
றோடும், வியப்போடும் முத்தாப்பு
வச்சான் நவம். இந்தக் கதையை நாட
கமாக்க வேணுமாம். இது அந்த
இளைஞன்ட ஆசையாம் எண்டு
என்ட முகத்தைப் பாத்தான் நவம்.
எனக்கு என்ன சொல்லுறதெண்டு
தெரியல்ல. "சரி பாப்பம்" என்டன் .
ஆனால் நவம் என்னோட உறவு
கொண்டாடிய காலம் வரை அந்தக்
கதையை என்னால நாடமாக்க முடி
யல்ல. அந்தக் கதையை நான் நாடக
மாக்கிய போது நவம் என்னோட
நண்பனாக இல்லை. அதுக்கிடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஏதோதோவெல்லாம் நடந்து முடிஞ்சி போச்சி!

ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி நெறியைப் பூர்த்தியாக்கிறதுக்கு ஒரு ஆக்கம் எழுதிக் குடுக்கவேண்டியிருந்தது. "ராஜபுதனத்தாதி" என்ட ஒரு நாடகத்தை நான் எழுதினதும் நவம் "இலக்கணக் கண்ணாடி" என்ட ஒரு ஆக்கத்தை எழுதினதும் ஞாபகமிரிக்கி. கலாசாலை நிருவாகத்திட்ட ஒப்படைச்ச "ராஜபுதனத்தாதி" யின் கதி என்னவோ தெரியல்ல. ஆனா நவத்திட "இலக்கணக்கண்ணாடி" எப்படி என்னிட்ட அகப்பட்டதோ - சூறாவளிக்கும் தப்பி என்னிட்டக் கிடக்குது. அது அந்தக்கால நினைவுகளை மீட்க உதவுது.

கலாசாலைக் காலம் முடிஞ்ச புறகும் நான் "நீரா மகளிர்" குறுங்காவியத்தையும் "கொய்யாக்கனிகள்" காவியத்தையும் அச்சு வாகனமேத்த, அயராது உழைச்சவன் நவம்தான். "நீரா மகளிர்" யாழ்ப்பாணம் கலைவாணி அச்சகத்தில பதிக்கப்பட்டது. "கொய்யாக் கனிகள்" ஆசிர்வாதம் அச்சகத்தில பதிக்கப்பட்டது. பதிப்பு வேலை அத்தனையையும் பொறுப்பேற்று, 'புறுப்' திருத்தி பிரதிகள் எல்லாத்தையும் யாழ்ப்பாணமிருந்து கொணர்ந்து தந்து, வெளியீட்டு விழாவில வெளியீட்டு உரையையும் நிகழ்த்திய நவத்தை எனது இறுதி மூச்சு வரை மறக்க முடியாது. அதுமட்டுமல்ல "நீரா மகளிர்"க்கு வாழ்த்துப்பாவொன்றை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து பெற்றுப் பிரசுரித்தமை, "கொய்யாக்கனி" க்காக வித்துவான் வேந்தனாரிடமிருந்து வாழ்த்துப்பா பெற்று நூல் முகப்பில் சேர்த்துக் கொண்டமை எல்லாம் நவம் எனக்காகச் செய்த அரும்பணிகள். இவையும் இன்னும் பலவும் நெஞ்சைவிட்டு நீங்காதவை.



ஜோ: போன கிழமை போலீஸ் என்னை அரெஸ்ட் பண்ணிட்டாங்க.

நண்பர்: நீ என்ன தப்பு செய்த?

ஜோ: கடைக்குப் போய் ஷொப்பிங் செய்தேன்.

நண்பர்: ஷொப்பிங் செய்ததுக்கா உன்னை அரெஸ்ட் பண்ணினாங்க?

ஜோ: இரவு அவங்க கடையை மூடின பிறகு ஷொப்பிங் போனன்.

நவத்தின் தயவாலேதான் பண்டிதமணி அவர்களை நான் காண முடிஞ்சிது. ஒரு நாள் பண்டிதமணியோட வீட்டில தங்கி நிக்கிற பாக்கியம் கிடைச்சிது. அங்கே உணவருந்தும் அனுபவமும் கிடைச்சிது. அந்தப் பெரிய கல்விமான் சின்னவனான என்னை மரியாதைப் பன்மையில அழைச்சதும், அன்போட பேசினதும் மறக்க முடியாத அனுபவங்கள். அவர் அருந்தும் உணவு எனக்குப் பிடிக்குமோ இல்லையோ என்பது பரிவோடு பகிர்ந்து நின்றமை அவரின் பெருந்தன்மைக்குச் சான்று தந்தது. அந்த அனுபவங்கள் எல்லாம் எனக்குக் கிடைக்க வழிசெய்த நவத்தின் உள்ளத்தை - அதன் விசாலத்தை நான் வியந்து நிற்கிறேன். யாழ்ப்பாணத்தில் பல பெரியார்களைச் சந்தித்து அளவளாவ வழி செய்தவன் நவம். பல நூல்களின் ஆசிரியரும் சிறந்த தமிழறிஞருமான குலரத்தினத்தை சந்திக்கும் வாய்ப்பு நவத்தாலே தான் எனக்குக் கிடைச்சிது. யாழ்ப்பாணத்தில நிண்டாப்ப ஒரு கூட்டத்தில பண்டிதமணி ஐயாட பேச்சைக் கேக்கும் வாய்ப்பையும் எனக்குக் கிடைக்கச் செய்தவன் நவம்தான். அந்த மண்டபத்தில ஒரே சலசலப்பு பண்டிதமணி பேச எழும்பினார்.



**நினைவு மலரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா பாதுகாப்பு சபையின் இழுபறி!



அண்மைக்காலமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச் சபை விவகாரங்கள் எங்களது செய்திகளில் முக்கியம் வகித்து வருவதை அவதானித்திருப்பீர்கள். வன்னி யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகளை பாதுகாப்புச் சபையில் விவாதிக்க வேண்டும் என்று பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகள் விரும்ப, அதனை சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் எதிர்க்க, இவ்வாறு உலக வல்லரசுகளின் போட்டிக் களமாக மீண்டும் இச்சபை உருவாகியிருக்கின்றது. இது பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்பட்டால் அரசின் நிலை தலைகீழாக மாறலாம் என்று அரசியல் அவதானிகள் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்றனர். அவ்வளவு முக்கியமான அங்கமாகிய ஐ.நா பாதுகாப்புச்சபை என்றால் என்ன?

1941ல் இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே தத்தமது நாடுகளில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போர் அக்கிரமங்களைக் கண்டு இவை இனி ஒரு போதும் நடைபெறாமலிருப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஒன்பது அரசாங்கங்கள் ஈடுபட்டிருந்தன. உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்குமாக சர்வதேச நியமங்கள், சட்டங்களுக்கு பொருந்தும் முறையில் சமாதானத் தீர்வுகளைக் கொண்டு வருவதற்காக, கூட்டான நடவடிக்கைகளில் உலக நாடுகள் ஈடுபடுவதே இவற்றின் முக்கிய நோக்கமாக இங்கு பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் தொடர் நடவடிக்கையே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமாக உருவாகியது.

1941ம் ஆண்டுப் பிரகடனப்படி உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கட்டமைப்பில் பாதுகாப்புச் சபை முக்கிய கவனம் பெற்றது. உலக வல்லரசுகள் ஏனைய நாடுகளுடன் இணைந்து எதிர்கால யுத்தங்களைத் தடுப்பதற்கு ஐ.நா என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்பதால் அவற்றை விசேட பாதுகாப்புச் சபையாக வடிவமைத்தார்கள். உலக சமாதானத்தை நிலை நிறுத்த அங்கத்துவ நாடுகள் தமது ஆயுதப் படைகளை பாதுகாப்புச் சபையின் கட்டளைக்குக் கீழ் நிறுத்தும் என்றும் தீர்மானித்தன. சமாதானத்துக்கான தமது ஆயுதப் படைகளை எங்கும் எந்த நேரமும் கொண்டு செல்லும் இந்த அதிகாரம் தான் பாதுகாப்புச் சபையின் முக்கியத்துவத்துக்குக் காரணம் என்று சொல்லலாம்.

ஆரம்பத்தில் பாதுகாப்புச் சபையில் 11 நாடுகள் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் அதில் 5 நாடுகள் நிரந்தர அங்கத்துவம் பெறுவன என்றும் ஏனையவை ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் அங்கத்துவம் பெறும் நாடுகளாக இருக்கும் என்றும் வரையறுத்தார்கள். ஒரு நாட்டில் படைகளைக் களமிறக்கும் தீர்மானங்களை இந்தச் சபை எவ்வாறு மேற்கொள்வது என்பதே பெரும் சர்ச்சைகளுக்கு இட்டுச் சென்றது. கடைசியில் ஐந்து நிரந்தர அங்கத்தவர்களுக்கும் வீட்டோ, அதாவது எந்தத் தீர்மானத்தையும் தடை செய்யும், அதிகாரங்களை வழங்கினார்கள். இதன்படி அன்று முன்னணியில் இருந்த நாடுகளான பிரித்தானியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியன பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தவர்களாகினார்கள். 1946ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ந் திகதி பாதுகாப்புச் சபை தனது முதல் கூட்டத்தினை ஆரம்பித்தது. 1956ம் ஆண்டு சபையின் மொத்த அங்கத்துவத்தை 15ஆக அதிகரித்தார்கள்.

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் அத்தியாயங்கள் 6ம் 7ம் பாதுகாப்புச் சபையின் உப விதிகளைத் தருகின்றன. பாதுகாப்புச் சபை உலகின் எந்த நாட்டிலும் கூடலாம்.

அது ஒரு நாட்டில் போரினைத் தோற்றுவிக்கும் முறையில் நடப்பவற்றைப் பற்றிய விசாரணைகளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளலாம். பேச்சு வார்த்தைகளை முடுக்கி விடலாம் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரலாம். சட்ட ரீதியான தீர்வுகளைத் தரலாம், மீள்இணக்கத்திற்கு வழி செய்யலாம், வழக்கைத் தானே கையாண்டு தீர்ப்புச் சொல்லலாம். இதெல்லாம் பிரயோசனமற்றுப் போனால் அத்தியாயம் 7 கூறுவது போல இராணுவ நடவடிக்கைகளை நேரடியாகவே மேற்கொள்ளலாம். பாதுகாப்பச் சபையில் நமது விவகாரம் போவதைப் பற்றி இலங்கை அரசாங்கம் ஏன் நடுங்குகின்றது என்பது இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

சபையின் தலைமை அதன் அங்கத்தவர்களிடையே ஒவ்வொரு மாதமும் ஆங்கில அகர வரிசைப்படி கைமாறும். சபைத் தலைவரானவர் எந்த நேரமும் எந்த விடயம் குறித்தும் விசேட கூட்டங்களைக் கூட்டலாம். அல்லது ஐ.நாவின் ஏனைய அங்கத்துவ நாடுகளும் ஒரு நிலைமையை சபைத் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வருவதாலும் அக்குறிப்பிட்ட பிரச்சினை பற்றி அது ஆராய முடியும். எங்கள் பிரச்சினையை அதன் நிரந்தர அங்கத்தவர்களான பிரிட்டனும் பிரான்ஸுமே முன்வைத்தன என்பதை செய்தித் தாள்களில் படித்து அறிந்திருப்பீர்கள்.



எப்படியானதொரு அருமையான சட்டம் இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துபவர்கள் மனிதர்கள் அல்லவா? அதற்கு பாதுகாப்புச் சபையும் விதிவிலக்கல்ல. உலக சமாதானத்தைக் காப்பாற்றும் நல்ல குறிக்கோள்கள் இருந்தாலும் வல்லரசுகளின் போட்டிக் களமாகத்தான் அது பெரும்பாலும் செயற்பட்டு வந்தது. இதற்கு சிறந்த கருவியானது அதன் நிரந்தர அங்கத்தவர்களின் "வீட்டோ" அதிகாரம். அவ்வப்போது ஒவ்வொரு நாடும் தனது குறுகிய நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த அதிகாரத்தைப் பிரயோகித்தது. 1989ம் .ஆண்டுக்கு முன்னர் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பனிப்போர் நிகழ்ந்த காலத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் எதிரும் புதிருமாகத் தமது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்ததைப் போல் இன்றும் இலங்கை விவகாரத்தில் சீனாவும் ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை சபையில் உத்தியோகபூர்வ முறையில் பேச விடாமல் செய்து விட்டன என்பதையும் நீங்கள் பத்திரிகைகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். எல்லாம் என்ன, இலங்கைக்குள் நடப்பது உலக சமாதானத்துக்கு ஊறு விளைவிக்காததால் அது உள்ளூர் விடயம் என்கின்ற சாக்குத்தான்.



பொதுசன நூலகம்

வீட்டோ அதிகாரம் ஒருபுறமிருக்க சபையின் செயலுறுதி எப்பொழுதுமே ஒரு கேள்விக் குறியாகத்தான் இருந்திருக்கின்றது. நீண்ட காலமாக இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினையில் தலையிட்டும் இஸ்ரேலுக்கெதிராக 52 தீர்மானங்களை அது நிறைவேற்றியும் இன்று வரை இப்பிரச்சினை தீரக்கப்படவும் இல்லை. இஸ்ரேலை அடக்கியபாடுமில்லை. ஆயினும் தென்னாபிரிக்காவிலிருந்து 1976 இல் நமீபியாவுக்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்த பொழுதும் 1992 இல் மொஸாம் பிக்கில் எடுத்த இராணுவ நடவடிக்கையும் 1980களில் எல்சல்வடோரில் சமாதானம் கொண்டு வந்த நடவடிக்கையும் ஓரளவு வெற்றிகளை சபைக்கு ஈட்டிக் கொடுத்தது எனலாம். இதையெல்லாம் பார்க்கும் போது எங்கு வல்லரசுகளின் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்றனவோ அங்கெல்லாம் பாதுகாப்புச் சபையால் சமாதானத்தை நிலைநாட்டக்கூடியதாக இருந்திருக்கின்றது என்பதைக் கண்டு கொள்ளலாம். அமெரிக்கா இஸ்ரேலை ஆதரிக்கும் வரைக்கும் பலஸ்தீனிய மக்களுக்கு பாதுகாப்புச் சபையால் ஒரு தீர்வையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

மொத்தமாகப் பார்க்கப் போனால், எல்லா நிறுவனங்களையும் போல மனிதர்களின் பலவீனங்கள் யாவையுமே பிரதிபலிக்கும் நிறுவனம்தான் ஐ.நா பாதுகாப்புச் சபை என்று கூறலாம். அது ஒரு சர்வதேச மட்டத்தில் செயற்படும் அமைப்பு என்பதனால் மிக மெதுவாகத்தான் செயற்பாடுகளில் ஆரம்பிக்கும். எத்தனையோ அறிக்கைகளைப் பரிசீலித்து, எத்தனையோ சிறு கலந்துரையாடல்களை நடத்தி அந்த அறிக்கைகளை ஒன்றுக்கு இரண்டாக நிச்சயப் படுத்திக்கொண்டு, எத்தனையோ நாடுகள் செயலில் இறங்கவேண்டும். ஐயோ வன்னியில் மக்கள் நாளுக்கு நாள் இறக்கின்றனரே என்று நாங்கள் கதறும் வீச்சுக்கு அதனால் அசைய முடியாது. மேலும் வல்லரசுகளின் நலன்களுக்கெதிராகவும் அது செயற்படமுடியாது. இதுதாண்டா உலகம்.

-சாந்தி சச்சிதானந்தம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெல்ஜியத்தின் பெருமை

**சமாதானத்தை** உருவாக்குவதில் பெண்களின் பங்கை வலுப்படுத்துதல் என்கின்ற விடயம் தொடர்பான மாநாடு ஒன்றிற்கு பிரஸ்ஸல்ஸிற்கு (Brussells) என்னை அழைத்திருந்தார்கள். பெல்ஜியம் நாட்டுக்கும் அதன் தலைநகரான பிரஸ்ஸல்ஸிற்கும் இதுதான் எனது முதல் பயணமாகும். பிரான்ஸ் ஜேர்மனி போன்று பெல்ஜியத்தில் நம்மவர்கள் அவ்வளவாக இல்லை என்பது எனது சுவாரசியத்தைக் குறைத்தது. அருமையான சொக்லேட்டுக்கள் உண்டு, நல்ல சீஸ் சாப்பிடலாம் என்றெல்லாம் உற்சாகப்படுத்தி நண்பர்கள் என்னை அழைத்துச் சென்றார்கள்.

பெல்ஜியம் இலங்கையோடு ஒப்பிடுகையில் அதன் அரைவாசிப் பங்கேயாகும். வடக்கே டச்சு மக்களின் நெதர்லாந்து நாடும், தெற்கில் பிரான்ஸும், கிழக்கே ஜேர்மனியும் தென்கிழக்கே லக்ஸெம்பேர்க் நாடும் இதன் எல்லைகளை வகுக்கின்றன. அதன் சனத்தொகை பத்தேகால் மில்லியன். அதுவும் இலங்கையைப் போலவே பன்மொழிகளும் பல்லினங்களும் கொண்ட தேசமாகும். பிரெஞ்சு - 44%, டச்சு - 55% மற்றும் ஜேர்மன் 1% மொழிகள் அங்கே பேசப்படுகின்றன. ஃபிளாண்டர்ஸ் (Flanders) எனப்படும் வடக்குப் பிரதேசத்தில் பெரும்பான்மை டச்சு மொழிக்காரரும், வால்லோனியா (Wallonia) என்னும் தெற்குப் பிரதேசத்தில் பெரும்பான்மை பிரெஞ்சு மொழி பேசுபவர்களும் தென் கிழக்கு எல்லையில் ஜேர்மன் மொழி பேசுபவர்களும் வாழ்கின்றனர்.

கிட்டத்தட்ட கி.பி 5ம் நூற்றாண்டிலிருந்தே தொடர்ந்த யுத்தங்களினால் பாதிக்கப்பட்ட தேசம் பெல்ஜியம். இரண்டாம் உலக மகா யுத்தத்தினாலும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் அதிகளவில் புராதனமான கட்டிடங்கள் அங்கு காணப்படவில்லை.

பிரஸ்ஸல்ஸ் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்கான விசேட பஸ் சேவையில் நானும் எனது நண்பர்களும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஏறிய பின்புதான் பெல்ஜியம் பற்றிய எனது ஆராய்ச்சியே ஆரம்பமானது. அந்த பஸ்ஸில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழைலிருந்து நாம் கடந்து போகும் இடங்களின் விளக்கங்களையும் வரலாற்றையும் சொல்லிக் கொண்டு வந்தது. நாங்கள் ஓரிடத்துக்கு வந்த போது "இனி பிரஸ்ஸல்ஸ் நகரின் பிரெஞ்சு பேசும் பக்கத்திலிருந்து டச்சு மொழி பேசும் பக்கத்திற்குப் போகின்றோம். அதோ தெரிகின்றதே அது தான் டச்சு மொழி பேசுபவர்களின் கொடியாகும்.." என்றது அது.


டச்சு மொழி பேசுபவர்களின் கொடியா? இதுபோல் பிரெஞ்சு மொழி பேசுபவர்களுக்கும் ஒரு கொடி இருக்கத்தானே வேண்டும்? அப்படியானால் பெல்ஜியத்தின் கொடி என்னவாகும்? எங்களுடைய ஸ்ரீலங்காவின் சிங்கக் கொடி இன்று ஒரு மாபெரும் யுத்தத்துக்கல்லவா வழிவிட்டிருக்கின்றது? இவர்களோ டச்சுக் கொடி பிரெஞ்சுக் கொடி என்று வெகு சிம்பிளாகச் சொல்லுகின்றார்களே. உடனேயே பெல்ஜியத்தின் அரசியல் விடயங்கள் தெரிந்த ஒருவரை அணுகி விளக்கங்களைக் கேட்டேன்.

பல நூற்றாண்டுகளாக ஜேர்மனியர்கள் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், ஸ்பானியர்கள் எல்லோரினதும் ஆதிக்கப் போட்டிகளின் களமாக இருந்த நாடுதான் பெல்ஜியம். கடைசியாக 1830ல் நெதர்லாந்திலிருந்து பிரிந்து தனிநாடாகியது. இத்தனிநாட்டை உருவாக்குவதற்கு அங்கிருந்த கத்தோலிக்க மக்களும், நிலப்பிரபுக்களும், நெதர்லாந்தின் வர்த்தக புரட்டஸ்தாந்திய ஆளும் குழுவினர்களுக்கெதிராக கூட்டுச் சேர்ந்ததே காரணமாகும். மன்னர் ஆளும் ஒற்றையாட்சியாக அதன் அரசியலமைப்புச் சட்டம் அந்தக் காலத்தில் வரையப்பட்டது. அந்த நேரம் மொழிகளைப் பற்றியும் இனங்களைப் பற்றியும் யாருமே கண்டு கொள்ளவில்லை.

ஆனால் தனிநாடாகப் போனதன் பின்னர், நாட்டின் பிரெஞ்சு மக்களுக்கும் டச்சு மக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்படலாயிற்று. பிரெஞ்சு மக்களின் மொழி, கலாசார, அரசியல், மேம்பாட்டைக் கண்டு டச்சுக்காரர்கள் பொருமினர். டச்சுக்காரர்களின் பொருளாதார வளர்ச்சியைக் கண்டு பிரெஞ்சுக்காரர் பெருமூச்சு விட்டனர்.

இதைவிட தலைநகரான பிரஸ்ஸல்ஸ் பெரும்பான்மையாக பிரெஞ்சுக்காரரைக் கொண்டிருந்ததோடு பெல்ஜியத்தின் ஏனைய பிரதேசங்களுக்கும் தலைமைத்துவம் வழங்கியதும் வேறு எல்லோர் கண்களையும் குத்தியது. இந்த சிக்கல்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன், கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மத வேறுபாடுகளையும் வர்த்தக நிலச்சுவாந்தர் வர்க்க வேறுபாடுகளையும், சேர்த்துப் பாருங்கள். பெல்ஜியத்தின் இடியப்பச் சிக்கல் முரண்பாடுகளை கொஞ்சமேனும் விளங்கிக்கொள்ள முடியும்.இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது உலக அரங்கில் ஜேர்மன் பிரெஞ்சு மக்கள் பரம எதிரிகளாகி விடவே இந்த முறுகல் நிலை இன்னும் மோசமாகி ஒரு உச்சக்கட்டத்திற்கு வந்து விட்டது. இவற்றைத் தீர்க்கும் முகமாக 1960களிலும் 1970களிலும் அதிகாரப் பரவலாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை இந்நாட்டு மக்கள் தமக்கெனவே உருவாக்கிக் கொண்டனர்.

இதன்படி 1970ல் முதல் சமஷ்டி அமைப்பு நிறுவப்பட்டது. பின்பு 1980ல் மொழிவாரியான சமூகங்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் செயற்படுத்தப்பட்டது. பின்னர் 1988ம் ஆண்டு அச்சமூகங்களின் அரசியல் அதிகாரங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு ஆழப்படுத்தப்பட்டன. 1993ல் இன்று இருக்கும் அரசியலமைப்பு இறுதியாக அங்கீகரிக்கப்பட்டது. மொழிரீதியான இனங்களின் தேவைகளுக்கேற்ப, அவர்களுக்கிடையேயான போட்டிகளைச் சமாளிக்க நீண்ட காலத்தினூடாக பரிணாம வளர்ச்சி கண்ட அரசியல் கட்டமைப்பு பெல்ஜியத்தினுடையது. உலகிலேயே மிகவும் புரட்சிகரமான, அதிகளவு அதிகாரங்களை சிறிய சமூகங்களுக்குக்கூட பகிர்ந்து கொண்டிருக்கும் அரசியலமைப்பு இது என்று சொல்வார்கள்.

1996ல் ஐரோப்பாவில் இலங்கைப் பிரச்சினை குறித்து நடத்தப்பட்ட ஒரு மாநாட்டில் புலிகள் சார்பில் பேசிய திரு ருத்திரகுமாரன்,



பெல்ஜிய முறையிலான அதிகாரப் பரவலாக்கலை புலிகள் ஆதரிக்கின்றனர் என்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் இன்று பெல்ஜியம் ஒரு நாடாக இருப்பதற்குக் காரணமே இந்த பாரிய அதிகாரப் பரவலாக்கல் அரசியலே என்றும் கூறுவர். பெல்ஜியத்தில் இன்னும் தேடலாம் ●

**சாந்தி சச்சிதானந்தம்**



தீபச்செல்வன்

# வருடத்தை தொடருகிற போரின் பிரகடனம்

எல்லா வருடங்களும்
வெறும் இரவுகளைத்தான் உதிர்க்கின்றன.
நான் உன்னை சந்திக்காத
எதையும் பகிராத கடந்த வருடத்தைப்போல்
இந்த வருடம்
நடு இரவில் வந்து
என்னை எழுப்பக் காத்திருக்கிறது.
போர் நமது கிராமத்தை அழித்து
கனவை
முடிவுறுத்துவதாய்
பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிற நாளில்
கைப்பற்றப்பட்ட
எல்லாம் காட்சிப்படுத்தப்படவிருக்கிறது.
நீயும் நானும்
வெகு சுலபமாக புறக்கணிக்கப்பட்ட
போரால் அணுகிக்கொண்டிருக்கிற
வெளியில்
துடிதுடித்துக்கொண்டிருக்கிறது
கொண்டாட்டங்களுக்குரிய நமது வீடு.
உன்னையும்
நமது சொற்களையும்
பகிர்ந்துருகவேண்டிய வெளிகளையும்
ஒரு சாரைப்பாம்பு
மிக அமைதியாக தின்று முடிக்கிறது.
வருடத்தை தொடருகிறது
அலைச்சலுக்கான போரின் பிரகடனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநகர சபையும் ஆசிய நிலையமும்




மட்டக்களப்பு மாநகரசபை மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இயங்க ஆரம்பித்ததன் பின்னர் அதனை வினைத்திறன் மிக்கதாக செயற்பட வைப்பதற்கு ஆசிய நிலையம் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய தமது உள்ளூர் பொருளாதார ஆட்சி செயற்திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு




பிரதி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மூலம் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆசிய நிலையம் மேற்கொள்கின்றது.

மட்டக்களப்பு மாநகர சபையினை எடுத்துக்கொண்டால் அங்கே ஒரு வாகனத்தரிப்பிடம் (car park) காணப்படவில்லை. இதனால் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு உரிய இடம் இருக்கவில்லை. அத்துடன் மாநகர சபைக்கு வருமானம் ஈட்டிக்கொள்ளும் சந்தர்ப்பமும் காணப்படவில்லை. ஆசிய நிலையத்தின் வழிகாட்டலூடாக தற்போது மட்டக்களப்பில் வாகனத் திரிப்பிடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன் மாநகர சபைக்கு இதன்மூலம் வருமானமும் கிடைக்கின்றது.



மட்டக்களப்பு மாநகர சபைக் கட்டிடத்தில் பொது மக்களின் நன்மை கருதி தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் கருமபீடம் மற்றும் நகர சபை கட்டடத்தின் கரும வரைபடம் என்பனவும் ஆசிய நிலையத்தின் வழிகாட்டல்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆசிய நிலையமானது உள்ளூர் பொருளாதார ஆட்சித்திட்டத்தின் மூலம் மட்டக்களப்பு மாநகரசபையில் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை நிகழ்ச்சிகளை மேற்கொள்கின்றது. இதன் முக்கிய நோக்கம் உள்ளூர் பொருளாதார வளர்ச்சியே ஆகும்.

உலகின் தேசிய கீதங்களின் மிகநீண்டது கிரீஸ் நாட்டின் தேசிய கீதமாகும். கிரீஸ் தேசிய கீதம் 158 வரிகளைக் கொண்டது.

உலகின் மிக அதிகமான குளிரைத் தாங்குகின்ற விலங்கு நோர்வே நாட்டில் உள்ள துருவ வாத்து 110 டிகிரி சென்டிகிரேடும் துருவக் கரடி 80டிகிரி சென்டிகிரேடும் குளிரைத் தாங்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரட்டை உலகு

கோள் சொல்லாதுவிட்டால் நாரதருக்கு பொழுது விடியாது என்பதுபோல ஒருவரையொருவர் பார்த்து கிண்டலடித்துப் பேசி அல்லது வம்பளக்காது விட்டால், இன்றைய இளைஞர் யுவதிகளுக்குப் பொழுது விடியாது. இந்த நவயுகத்தில் விளையாட்டுக்காக அல்லது "சும்மா" என்று இந்த 21ஆம் நூற்றாண்டு மாற்றமடைந்துள்ளது. ஆம் இந்த நவயுகத்தில் விளையாட்டுக்காகவென்றும் சும்மா பகிடிக்காக என்றும் கூறிக்கொண்டு ஒருவரையொருவர் பார்த்துப் பேசும், வம்பளக்கும் இடங்களாகவே அலுவலகங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன.



அலுவலகத்தில் சுறுசுறுப்பாக வேலை நடக்குதோ இல்லையோ இவ்வாறான தேவையற்ற அரட்டைகளுக்கு குறைவில்லையென்பது கண்கூடு. இளைஞர்களும் யுவதிகளும் வேலைக்கு வந்தால் கையெழுத்தினை போட்டுவிட்டு நேரடியாக வந்து தமக்குரிய இருக்கையில் உட்கார்ந்து கண்ணும் கருத்துமாக தமது வேலையினைப் பார்க்காமல் மற்றையவர்களின் விடயங்களிலேயே அதிதீவிர கவனம் செலுத்துகின்றனர். இதனால் இவர்கள் தமது வேலையைக்கூட சரியான முறையில் செய்யத்தவறி தமது மேலதிகாரிகளிடம் பேச்சு வாங்கிக் கொள்கின்றனர். தங்களுடன் வேலைக்கு வரும் சக ஊழியர்களைப் பார்த்து ஏதாவது தரக்குறைவாக பேசுவது, அவர்களின் சொந்த விடயங்களில் தலையிடுவது, அவர்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக்கேட்பது, அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது. பாலியல் சேஷ்டைகள் செய்வது அல்லது கதைகட்டுவது. இவை மாத்திரமல்லாது சத்தமாகச் சிரித்துப் பேசி ஏனைய ஊழியர்களையும் வேலை செய்யவிடாமல் அவர்களுக்கு தொந்தரவு கொடுப்பது ஆகிய தீய குணாம்சங்களோடு அலுவலகங்களில் பணிபுரிபவர்களில் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.



இவ்வாறு அரட்டையடித்துப் பேசி தங்களது பொன்னான நேரத்தை பிரயோசமான முறையில் செலவழிக்காமல் வீணடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அலுவலகங்களில் அரட்டையடிப்பவர்கள் முதலில் உணரத் தவறிவிடுகின்றனர். இது மாத்திரமல்லாது ஒவ்வொருவர் மீதும் புறம் கூறி அரட்டையடிப்பது சிலருக்கு வேதனை தரும் விடயமாக மாறுகின்றது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்ற முதுமொழிக்கமைய தமது வீடுகளில் பழகிய தீய பழக்கவழக்கங்களை தாங்களாகவே இவ்வாறான பொது இடங்களில் அம்பலப்படுத்தி தங்களது ஆளுமையை மற்றையவர்கள் தரக்குறைவாக மதிப்பிடுவதற்கும் அவர்களாகவே வழிசெய்கின்றனர். தமது முன்னேற்றப் பாதையில் தாமே வீழ்வதற்கான அறிகுறி இதுவென அவர்கள் சிந்திக்கத் தவறினாலும் அவர்களை சுற்றியுள்ள ஒரு சிலர் இதனை உணர்ந்து கொள்கின்றனர். இனிமேலாவது அலுவலகங்களில் அரட்டையடித்துப் பேசுபவர்கள் தங்களது வேலையை மாத்திரம் பார்த்துக் கொண்டு பிறர் மனதை நோகடிக்காதபடி நடந்துகொண்டால் மற்றவர்களால் விரும்பப்படாவிட்டாலும், வெறுக்கப்படாதவர்களாக வாழ்வதற்கான வாய்ப்பினை அவர்கள் பெறுவார்கள்.

-தினேஸ்-







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வதையின் கதை

—அக்ஷயா—

பொபியுடன் வேலையை ஆரம்பிக்க நாமல் தயாராக வந்தான். நாமலும் ரஞ்சித்துமாக கண்ணைக் கட்டிய நிலைமையில் அவனை ஒரு அறைக்குள் தள்ளிக் கொண்டு போனார்கள். எத்தனை நாட்கள் அவன் இங்கு இருந்தாலும் இருக்கும்வரை அவன் சதா சர்வகாலமும் கண்களைக் கட்டிக் கொண்டே இருந்தாக வேண்டும். டொய்லட்டுக்குப் போனாலும் டொய்லட்டுக்குள் தான் அதை அவிழ்க்கலாம். அங்கும் வேலை முடிந்தவுடன் உடனேயே கண்ணைக் கட்டிக் கொண்டு விட வேண்டும். இதன்மூலம் நாள், நேரம், திசை போன்றவை குறித்த சகல உணர்வு நிலையையும் குழப்ப நிலைக்குள் தள்ளி பொய் சொல்ல முடியாதவாறு அவனது மூளையைக் களைத்துப் போக வைக்கலாம்.

ஆரம்பத்தில் இருந்ததை விட இப்போது சிறிது திடமாகத் தோன்றினான் பொபி. உண்மையைச் சொல். பொய் சொன்னாயோ உன் கதை முடிந்தது, என்று வேலையை ஆரம்பித்தான் ரஞ்சித். நீ நூற்றுக் கணக்கான பேர்களை வேலைக்கு வைத்திருக்கிறாயே அவர்களில் எத்தனை பேர் எல்.டி.டி.இ? பொலீஸில இத்தனை பேரைத் தெரிஞ்சு வைத்திருக்கிறாயே. எவ்வளவு காசு அவர்களுக்குக் கொடுக்கிறாய் ? உன் தொடர்புகளின் லிங் யார் யார்? கடந்த ஒரு வருடத்தில் எத்தனை முறை வன்னி சென்றாய்? வன்னியில் யார் யாரைச் சந்தித்தாய்? இந்த போன் நம்பர் யாருடையது? உன்னுடைய போன் ரெக்கோர்ட்டில் இருக்கிறதே உனக்கு சத்தியமாகத் தெரியாது? இந்தக் கார் நம்பர் யாருடையது? போன ஜுலை மாதம் 19 ந்தேதி இந்தக் கார் உன்னுடைய வீட்டுக்கு முன்னால் பார்க் பண்ணியிருந்ததே. ஏன்? கேள்விகள் இருபது நாட்களாகக் கேட்டார்கள். விட்டு விட்டுக் கேட்டார்கள். ஒரே கேள்வியை ஒவ்வொரு கோணத்தில் கேட்டார்கள். அவனைத் தலை கீழாகக் கட்டித் தொங்கவிட்டு



எஸ்லோன் பைப்பினால் அடிப் பாதத்தில் அடித்தடித்துக் கேட்டார்கள். செவிப்பறை உடையும் வரைக்கும் அறைந்து கேட்டார்கள். அவன் சொன்ன தகவல்களை உடனுக்குடன் தொலைபேசியில் அழைத்து

நூலகம்
யாழ்ப்பாணம்.

உலகிலேயே அதிகமாக வாடகை அறவிடும்
விடுதி. அமெரிக்காவின்
லாஸ்வேகாஸ் மாகாணத்தில் உள்ள
எம்.ஜி.எம். கிராண்ட் சாலையில்
உள்ள "தி மேன்ஷன் "தான். இந்த விடுதியில்
ஒரு நாள் தங்கவதற்கு வாடகை
6 லட்சம் ரூபாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்து நிச்சயப்படுத்திக் கொண்டு கேட்டார்கள். ம்ஹூம் எங்கும் பிடிபடவில்லை. ரஞ்சித் அவனைப்பற்றிய ரிப்போர்ட்டைத் தயாரிக்கத் தொடங்கினான்.

வாடா வா. என்னத்துக்கு ரிப்போர்ட் அது இது எண்டு வெகுவா வேலை செய்கிறாய். இதுக்கு ஒத்துக் கொண்டான் அதுக்கு ஒத்துக் கொண்டான் எண்டு இரண்டு வசனம் எழுதவே ஆளைப் போட்டுத் தள்ளிடலாமே. பிழைக்கத் தெரியாதவன் போ. துஷாரா கையில் சாராய கிளாஸுடன் வீடியோ பார்த்துக் கொண்டு இவனிடம் அலட்சியமாகச் சொன்னான். அவன் பார்த்துக் கொண்டிருந்த வீடியோவில் இவர்கள் முந்தாநாள் போட்டுத் தள்ளிய ஒரு கைதியின் விசாரணை நடந்து கொண்டிருந்தது. அதில் அந்தக் கைதி குழறி அழுது கொண்டிருந்தான். இடையிடையே தனது உயிரைக் காப்பாற்றும்படி கெஞ்சிக் கொண்டிருந்தான். இந்த சம்பவத்திற்கு அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் அவனைப் பிணமாக்கி ஜீப்பில் கொண்டு அவிசாவளை றோட்டுக்கு அப்பால போய் போட்டுவிட்டு வரப் போகிறார்கள். இங்கு அவனை துஷாராவும் அவன் கூட்டாளியுமாக பார்த்து இரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர். 'சீ என்ன வாழ்க்கை டாப்பா. நிஜ வாழ்க்கையில் இந்த அவலத்தைப் பார்ப்பது போதா



தென்று வீடியோவிலும் பார்க்க வேண்டுமா? கதறல், வலி, அவலம், குருதி, சதைப் பிண்டம். இவற்றையே பார்த்தும் கேட்டும் பார்த்தும் கேட்டும். எங்கள் எல்லோருக்கும் என்ன நடக்கிறது?

எஸ்.பி மாயாதுன்ன உள்ளே நுழைந்தார் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றான் ரஞ்சித். இவர்களுடைய ஒப்ரேஷன்களெல்லாம் மாயாதுண்ணவின் மேற்பார்வையில்தான் நடந்தன. யாரோ முக்கிய அமைச்சருக்கு பொறுப்புக் கூறவேண்டியவர் என்று கேள்விப்பட்டிருக்கின்றான். ஆனால் உறுதியாகத் தெரியவில்லை. அவனும் அவனைப் போன்ற ஏனைய விசாரணை அதிகாரிகளும் அவரைச் சூழ நின்று தங்கள் தங்கள் விசாரணைகளின் விபரங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். போட்டுத் தள்ளுவதா இல்லையா என்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. முடிவில் அவர் எழுந்து நின்றபோது ரஞ்சித் தான் தனது தலை மயிரைத் தடவியபடி அவர் முன்னால் பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

"என்ன?"

"சேர் வீட்டுக்கு நிறைய நாட்களாகப் போகவில்லை. . லீவு வேண்டும் சேர்"

"கொழும்பில பயங்கரவாதிகளின்ட நெட்வேர்க் எல்லாத்தையும் முறிக்கிறதுக்கு எங்களுக்கெல்லாம்



டார்கட் கொடுத்திருக்கு. தெரியுந்தானே, இதுக்குள்ளே போகிறதென்றால்..."

"தெரியும் சேர்... ஒரு மூன்று நாளைக்காவது. . . ."

"சரி சரி..இரண்டு நாட்களுக்குப் போய்வரலாம்.."

உள்ளே பொங்கி வந்த மகிழ்ச்சியை கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றான். நேரே பொபியிடம் சென்றான்.

"வீட்டுக்குப் போகப் போகிறாயா? "அவனிடம் வினவினான். இந்தக் கேள்வியின் முழு அர்த்தமும் விளங்க பொபிக்கு சிறிது நேரம் பிடித்தது. கறுப்புத் துணியாலே கண்கள் கட்டுப்பட்ட நிலையிலும் அவன் முகத்தில் பளிச்சென்று தெரிந்த நிம்மதியையும் சிரிப்பையும் கண்டு இவன் இதயம் இலேசாகியது போல் தோன்றியது. அம்மாவையும் தங்கைகளையும் அனோமாவையும் நாய்க்குட்டியையும் வீட்டுத் தோட்டத்து அலரி மரத்தையும் நினைத்துக் கொண்டு விசில் அடித்தபடி தனது அடுத்த வேலையைக் கவனிக்கத் திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிசொல்லும் கதை

தென்னிந்திய கவிஞரும் பாடலாசிரியருமான பா.விஜய் 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி கோயமுத்தூரில் பிறந்தார்.

இயக்குனர் கே. பாக்யராஜ் அவர்களின் ஞானப்பழம் படத்தில் முதலில் பாடலாசிரியராக அறிமுகமான இவர். இதுவரை சுமார் 300 படங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளதுடன் இதுவரை 800க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். ஒட்டோகிராப் படத்துக்காக எழுதிய "ஒவ்வொரு பூக்களுமே" என்ற பாடலுக்காக 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை பெற்றார். தமிழக முதல்வர் கலைஞர் திரு. மு.கருணாநிதி இவருக்கு வித்தகக் கவிஞர் என்ற பட்டம் வழங்கி பாராட்டியுள்ளார். காப்பிய கவிஞர் வாலி அவர்கள் தமது கலையுலக வாரிசாக பா.விஜய் அவர்களை அறிவித்து பெருமையளித்துள்ளார்.

அத்தகைய வித்தகக் கலைஞரின் கவிதைகளை ஆய்வு செய்து சிறுபகுதியை இங்கு தருகிறேன்.

இந்த உலகத்தையும் அதில் வாழும் உயிர்களையும் இந்த இளவயதில் நோக்கும் கூர்ந்த பார்வைகளையும் என்னவென்று நாம் சொல்வோம்!



உழைப்பவர்களையும் உழைக்காமல் வீணே உலகைப் பாழ்படுத்துவோரையும் வளரும் சமுதாயத்தையும் உற்று நோக்கும் அவரின் சிந்தனைகள் வாசிப்போர் நெஞ்சங்களை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவரின் சிந்தனைகளின் ஒரு சிறு துளியாகவே திரை இசைப்பாடல்கள் கேட்போர் உள்ளங்களை மகிழ்வூட்டிச் செல்கின்றன. அதிலும், காதல் பாடல்கள் இளம் காதலர்களின் நெஞ்சங்களை வலுவூட்டிச் செல்கின்றன. இக்காதலர்களின் காதல் கடிதங்களில் பா. விஜய் இன் காதல் வரிகளே அதிகம் பரிமாறப்படுகின்றன. அவை அடிக்கடி உச்சரிக்கவும் செய்கின்றன.

"உன்னைப் போல் ஒருத்தி
மண்ணிலே பிறக்கவில்லை!
என்னைப் போல யாரும்
உன்னைத்தான்
ரசிக்கவில்லை."

இதுவே பா. விஜயின் முதல் திரை இசைப்பாடலாகும். அவருடைய முதல்பாடலைக் கூட காதலர்களுக்காகவே வடிவமைத்திருந்தார்.


காதலுக்கு வரைவிலக்கணம் இப்படிக்கூறுகின்றார்.

உன்னைக்கொடு
என்னைத் தருவேன் - இது தான்
காதலடி!
கண்ணீர் கொண்டு
புன்னகை தருவேன் - இதுவும்
காதலடி!"

"என்று காதலனும்

என்னைத் தந்து உன்னைப்
பெறுவேன் - காதல்
இது தானே!

"கண்ணைத் தந்து கனவை
பெறுவேன் - காதல்
இது தானே!"








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காதலியும் காதல் சொல்லி காதல் செய்யும் காதலர்களின் காதல் நிலையை அழகாக படம் பிடித்துக்காட்டுவது போல் சொல்லி விடுகின்றார்.

“மான் குட்டியே புள்ளி
மான் குட்டியே
உன் மேனிதான் ஒரு
பூத்தொட்டியே!
உன் கொழு கொழு
கன்னங்கள் பார்த்து
என் மனசில தெருக்கூத்து
உன் ரவிக்கையின் ரகசியம்
பார்த்து
என் நெஞ்சில புயற்காற்று”

என்று காதலன் தன் அழகு நிறைந்த காதலியை வர்ணித்துக் கொள்கின்றான். மேலும்

“பெண்ணே நீயும் பெண்ணா
எல்லோரா ஓவியம்
இரண்டே இரண்டு கண்ணா
ஒவ்வொன்றும் காவியம்
ஒரு மூன்றாம் பிறையைச் சுற்றி
தங்க ஜரிகை செய்த நெற்றி



பனிப்பூக்கள் தேர்தல்
வைத்தால்
அடி உனக்கே என்றும் வெற்றி”

என்று கற்பனைக்கு அப்பால் வர்ணித்து வர்ணம் பூசிச்செல்கின்றார்.

“பேரழகு என்றேதான்
பெண்ணவளைச்
சொன்னாலோ
சூரியனை பிறை என்று
சொல்லுவதைப் போலாகும்”

என்ற தொகையறாவில் தொடங்கி பல்லவியில்

“ஆஹா என்பார்கள்
அடடா என்பார்கள்
அவளைப் பார்த்த எல்லோரும்
மூன்றே வினாடி
அவளைக் கண்டாலே
நெஞ்சைத் தாக்கும்
மின்சாரம்.”

என்று சொல்லி அவள் மூச்சு விடும் றோசாப்பூ என்று உயர்வு நவிற்சி அணியால் சொல்ல நினைப்பது மிகவும் இரசிக்கும் ஒரு விடயமே ஆகும்.

இரசாயன மூலகங்கள் தங்களுக்குள் தனித்தனி இயல்புகளைக் கொண்டிருக்கும். அவை ஒன்றோடு ஒன்று சேரும் போது சேர்வையாகி புதியதோர் இயல்பைத்தோற்றுவித்து விடும். இதுவே இரசாயன மாற்றம் ( வேதியல் மாற்றம்) இந்த விஞ்ஞான உண்மையினை வித்தகக் கவிஞர் கையாண்டுள்ள விதம் அவரது காதலின் நவீன சிந்தனையை எடுத்துக்காட்டி விடுகின்றது.

“துளித்துளியாய் கொட்டும்
மழைத்துளியாய் - என்
இதயத்தை இதயத்தை
நனைத்து விட்டாய்.
பார்வையிலே உன்
பார்வையிலே
ஒரு வேதியல் மாற்றத்தை
நிகழ்த்தி விட்டாய்”

இதை விட வேறு எப்படி விஞ்ஞான ரீதியில் வேறு வேறு மன இயல்பு படைத்த இரு இதயங்களின் புதியதொரு மன இயல்பை எடுத்துக் காட்ட முடியும்.

காதலன் காதலிக்காக காத்திருக்கும் நேரம் அடடா அதை என்னவென்று சொல்வோம். காத்திருக்கும் ஒவ்வொரு நொடியும் சுகம் தரும் சுகமான வலிகள்.

“சில்...சில்.... சில்.....
சில்லல்லா
சொல் சொல் தீ மின்னலா”

என்ற பாடலிலே

“தீயிருக்கும் தாளில் எல்லாம்
இமயத்தின் மேலே இருப்பேன்!
தீயும் இங்கு இல்லா தாளில்
என் மீது இமயம் இருக்கும்”

என்று காதலனின் உள ஏக்கத்தினை, சுகமான வலியினை எடுத்துக் கூறி நல்ல காதலின் உயர்வினை உயர்த்திச் செல்கின்றார்.

மிகுதி அடுத்த இதழில் முடியும்



ஒரு பொல்லாப்புமில்லை
# இருக்கிறம்
மாதம் இருமுறை

காத்திருப்பு 03 - இருக்கை 07

ஈகோ ப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com

ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் /ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
க. பிரணவன்
பஸ்லான் மொஹமட்

கௌரவ ஓவியர் :
ஆசை இராசையா

ஓவியர் :
சஞ்ஜீத்

முதன்மை வடிவமைப்பு :
முஜீன்நாத்

வடிவமைப்பு :
க. பிரணவன்
சோ.விபுலன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதீஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடையார்கட்டின் நினைவுகள்



UK Central College இப்படித்தான் சொல்லுவோம். ஆனால் மத்திய கல்லூரி அல்ல. வெறும் மகாவித்தியாலயம் தான். உடையார் கட்டு மகாவித்தியாலயம். பரந்தன் முல்லைத்தீவு வழியில் விசுவமடுவிற்கு அடுத்ததாக சில கட்டடங்கள், சில கொட்டில்கள், சில மர நிழல்கள் இவை தான் அப்பாடசாலையில் மொத்த மான கட்டுமானங்கள். அப்போது 1996 நான்கைந்து பாடசாலை அனுபவங்கள் எனக்கு உண்டு. எல்லாமே மூன்று வருடங்களுக்கு மேற்படாதவை. அது ஓடிக் கொண்டிருப்பவருக்கான பொதுவிதி.

ஆனாலும் என்னவோ பள்ளிக் காலம் என்றவுடன் UK என்கிற உடையார் கட்டு பாடசாலைதான் நினைவுக்கு வருகிறது. ஏன் என்பதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்க முடியும். அது முதன் முறையாக பெண்களோடு அருகருகே பயிலும் வாய்ப்பு. வாராது வந்த மாமழையான வாய்ப்பு. பதற்றமும் தயக்கமும் மகிழ்ச்சியுமான அப்போது வயது 16.

ஒரு ஏப்ரல் நாள். கடந்த நான்கு மாதங்களில் வன்னி மெதுமெதுவாக இயைபடைந்து விட்டிருந்தது. கொஞ்சக்காலம் கொட்டில் கட்டுவதில் போனபோது சும்மாயிருக்கிறோமே எனத் தோன்றவில்லை. மென் இருண்மைக் காடுகளில் சுரை முட்கள் கிழித்தெடுக்க தடிகள் வெட்டினோம். சுரை முள் சும்மா இல்லை. மற்றைய முட்களினின்றும் மாறுபட்டது. தூண்டிலைப் போல எதிர் வளமாய் இருக்கும். ஆரம்பங்களில் கிழி கிழியென கிழித்திருக்கிறது.

மொத்தம் மூன்று கொட்டில்கள். சிறிதும் பெரிதுமாக, சுவர்களுக்கு மண்ணுக்காக குழிகள் தோண்ட வேண்டியிருந்தது. ஒரே இடத்தில் தோண்டியிருந்தால் யானைக்கு பொறிக்கிடங்கு ஆகியிருக்கும். ஆனால் நீளமாக ஓடி பிறகு வலது பக்கம் திரும்பி கிட்டத் தட்ட வடிவில் மண்ணை அகழ்ந்தெடுத்தோம். பொதுக் கிணறு, பொதுக் கக்கூசு (காட்டின் எல்லையோரம் ஆளுயரப் புற்களின் மறைப்பிலான பொது நிலம்தான் அது) போலவே பொதுப் பதுங்குகுழி அது. குண்டு தள்ளி விழுந்தால் பதுங்குகுழி உள்ளே விழுந்தால் மரணக்குழி.

வன்னி அவ்வாறான ஒரு சனத்திரளை கண்டிருக்காது. திடீரென வீங்கி முட்டியதைப் போல கொஞ்சமென்ன அதிகம் திணறித்தான் போனது. நிலம் பெரிதுதான். யாழ்ப்பாணகுடாவை விட கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகம்தான். ஆனால் அத்தனை மக்கட் கூட்டத்தின் கொள்ளளவைத் தாங்கிக் கொள்வதற்கு அது தயாராய் இருக்கவில்லை. தன்னளவில் நிறைவான உற்பத்தியோடு தன்னளவில் அளவான விலை விகிதங்களோடு எல்லோராலும் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒற்றை ஜீவனைப் போல வன்னி தன் பாட்டுக்கு சிவனே என்று இருந்தது.

ஒதுக்கி வைக்கப்பட்ட நிலம் தான். 94 வரையும் வன்னி தொடர்பான யாழ்ப்பாணத்துப் புரிதல் எப்படி இருந்தது. வன்னியோ அது காய்ந்து போன கருவாட்டு நிலமெல்லோ. அங்கை மனிசர் இருப்பினமோ. நுளம்பும் மலேரியாவும்.. ச்சீச்சீ தூத்து.

ஒரு இரவில் காலம் எல்லாவற்றையும் அடித்துதுவைத்துக் காயப் போட்டது. கொஞ்சம் கொஞ்சமாய் கொசுக்கள் பழகின. காடு பழகியது. யானைகள் பழகின. குரங்குகள் பழகின.

இனிப் பள்ளிக் கூடம் பழக வேண்டும். கையில் பள்ளிச் சான்றிதழ்களோ, ஏதும் அடையாளங்களோ இல்லை. கட்டடத்தின் வெளியே ஒரு மேசையைப் போட்டு பெயர் முன்னைய பாடசாலை கடைசியாய் படித்த வகுப்பு எல்லாவற்றையும் எழுதிக் கொண்டிருந்தார் ஏகாம்பரம் சேர். பின்னாட்களில் எனது கணக்கு வாத்தியார். ஆசிரியப் பயிற்சி நெறிக்காக யாழ்ப்பாணம் பல தடவைகள் முன்பு வந்திருக்கிறார். பாடநேரங்களில் சில முன் வலிகள் அவரையுமறியாமல் வந்து விழும். அப்ப எல்லாம் ட்ரெயினிங் வந்த போது வன்னியென்டால் ஒரு நக்கல் உங்களுக்கு. இப்ப? என்பதோடு நிறுத்துவார். அந்த மனதை அப்போதை விட இப்போது அ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக உணர முடிகிறது.

வெள்ளைச் சேட்டு நீலக் காற்சட்டை கறுத்தச்சப்பாத்து கட்டாயம் என்ற முன்னைய பாடசாலையின் கொழுப்பெடுத்த விதிகளை யுத்தம் தூக்கிச் சாப்பிட்டு விட்டது. வெள்ளையைக் கிட்டவும் நெருங்க முடியாத ஒரு மண்ணிற அரைக்கை சேர்ட்டும் சாம்பல் நிற காற்சட்டையும் கான்சர் வருமென பயமுறுத்தினாலும் கனகாலமாக என் காலோடு தேய்ந்த நீல நிற முள்ளுச் செருப்புமென ஏகாம்பரம் சேருக்கு எனது முன்னைய பள்ளியின் பெயரையும் படித்த வகுப்பையும் சொன்னேன். ஓ.. அப்ப இந்த வருசம் ஓ.எல் சோதினை. என்று நான் மறந்தே போயிருந்த விசயத்தை அவர் நினைவு படுத்தினார். இன்னும் எட்டே மாதங்கள் இருக்கிறது. கடந்த ஆறு மாதமாய்ப் பள்ளிப் புத்தகங்களை பார்த்தது கூட இல்லை.

பாடசாலைக் கட்டடங்களில் மக்கள் இருந்தார்கள். வெளியே மர நிழல்களில் வாங்கு மேசைகளை போட்டோம். ஆரம்பத்தில் நிரந்தர மாணவர்களுக்கு காலையும் இடம் பெயர்ந்தவர்களுக்கு மாலை வகுப்பும் என நடாத்தினார்கள். மதியம் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும். வீட்டில் சாப்பிட்டுவிட்டு சைக்கிள் ஓடி வந்தால் அருமையான நித்திரை வரும். மரநிழல் சுகமான காற்று தாலாட்டும். ஆசிரியர்கள் திட்டுவதற்கு எழுப்பினால் கூட வீடு வாசல் கிராமம் நகரம் என அனைத்தையும் இழந்து வந்த சோகத்தை முகத்தில் அப்பி விட்டு நிற்போம். இரங்கி இறங்கி விடுவார்கள். (முன்னைய யாழ்பாணத்துப் பள்ளியில் புண்ணியலிங்கம் சேர் தண்டிப்பதற்கு அழைத்தால் முதல்வேலையாக நெற்றியில் திருநீறை அப்பி முன் சென்று நிற்போம். சிவனடியார்களை துன்புறுத்தலாகாது என்பது அவரது கொள்கை.)

மதிய நேரத்துப் பள்ளி வேலைக்காகாது என்பதை சீக்கிரமே உணர்ந்து கொண்டார்கள். ஒரு புதிய புத்துணர்ச்சியுடன் கூடிய வாழ்வில் மறக்கவே முடியாத பள்ளி வாழ்க்கை. அதன் பின்னர் எனக்கு ஆரம்பித்தது.

‹ சயந்தன் ›







# வாசகர் கணை

இருக்கிறம் சஞ்சிகையின் பயணத்திற்கு வாழ்த்துக்கள். சென்ற காதலர் தின இதழின் அட்டைப்படம் காதலர் தினத்திற்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அத்தோடு புத்தகத்தில் எழுத்துப்பிழைகள் அதிகம் காணப்படுகின்றன. குறைத்துக் கொண்டால் நல்லது.

அ.ரூபி
பொரளை கொழும்பு

வணக்கம்
இருக்கிறம் பெண்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அவர்கள் தொடர்பான விடையங்களையும். பெண் எழுத்தாளர்களுடைய ஆக்கங்களையும் இணைத்து வருகின்றமைக்கு நன்றி.

[illegible]

வணக்கம் ஆசிரியர்
இருக்கிறமின் *01.03.2009* இதழ் பார்த்தேன். மிகவும் நன்றாகவிருந்தது. மகளிர் தினத்தை முன்னிட்டு 'யுத்தத்தின் இளம் குழந்தைகளை நோக்கி' எனும் கட்டுரை மிகவும் நன்றாவிருந்தது. தென்னிலங்கையில் எந்தையும் தாயும் எமது சமுகத்தின் இன்றைய நிலையையும் புலம்பெயர்ந்த மக்களின் மனநிலையையும் எடுத்துக்காட்டி நிற்கின்றது. ஜனகரலிய நாடகக் குழுவினருக்கும் அதை வெளிப்படுத்திய இருக்கிறம் சஞ்சிகைக்கும் எனது நன்றிகள். மேன்மேலும் இருக்கிறம் வளர வாழ்த்துக்கள்.

[illegible]

*15-02-2009*ஆம் திகதி வெளிவந்த இதழில் கொழும்பில் நடைபெற்ற கலாபொல கண்காட்சி பற்றிய கவர்ஸ்டோரி பார்த்தேன். அக்கட்டுரையில் இருக்கிறமிற்கு கருத்துக்களைத் தெரிவித்த சிங்கள நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

[illegible]

இருக்கிறமின் காதலர் தின இதழ் உண்மையிலேயே நான் எதிர்பார்த்ததைவிட மிகவும் நன்றாக இருக்கின்றது. கட்டுரைகள் பக்கவடிவமைப்புக்கள் எல்லாமே அற்புதமாக இருக்கின்றன. தொடர்ந்து இணைந்திருப்பேன். நகைச்சுவைகளை அதிகம் சேருங்கள்.

க.வத்சலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ஐ.ச.ஜெயபாலன்

**பாகம் 18**


***யாழ் பல்கலைக் கழக பேராசிரியர் நித்தியின் அன்றைய உரையை இன்றும் பாலனால் மறக்க முடியவில்லை. கிண்டலும் சிரிப்பும் கலந்த நித்தியின் அன்றைய ஆங்கிலப் போர்ப்பட விமர்சன உரையை இன்றும் பாலன் நினைத்துக் கொள்வான். அன்றைய கிண்டல்கள் இன்றும் பல்கலைக் கழகத்தில் உலாவியதைப் பாலன் அறிவான்.***



ஆனால் அந்தக் இந்தக் கிண்டல் பேச்சே பின்னர் வினையாகிவிட்டது. மேற்படி நிகழ்வு பற்றிக் கேள்விப்பட்ட பொலிஸ் உளவாளி ஒருவன் போராட்டம் பற்றிய படங்களைக் காட்டி பேராசிரியர் நித்தி 'மக்கள் யுத்தம்' பற்றி வகுப்பு நடத்துகிறார். மக்களைக் குறிப்பாகப் பெண்களையும் பிரமச்சாரிகளையும் ஆயுதம் தூக்க வருமாறும் போராட்டதில் இணையுமாறும் தூண்டுகிறார். போராட்டத்தின் அடையாளமாக நீண்ட தலைமயிரும் தாடி வளர்க்கும்படியும் மாணவர்களைத் தூண்டுகிறார் என்று முறைப்பாடு கொடுத்துவிட்டான். அதன்பிறகு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி திருகோணமலை மட்டக்களப்பிலும்கூட தலை வளர்த்திருந்த தாடி, வைத்திருந்த அப்பாவித் தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவமும் பொலிசும் தேடித் தேடித் தாக்கத் தொடங்கினார்கள். தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் முதலில் செய்கிற காரியம் விடுதலை அமைப்புக்களைத் தேடிப்போய்ச் சந்திக்கிறதாகவே இருந் தது. சில நாட்களின் முன்னம் அதிகாலையில் நித்தியின் வீட்டுக்குள் புகுந்த பொலீசார் மக்களை ஆயுதம் தூக்கத் தூண்டுவதாகக் குற்றம்சாட்டி நித்தியையும் நிரஞ்சனாவையும் கைது செய்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்து இராணுவம் பல ஆவணக் கோப்புகளையும் ஒலிப்பதிவு நாடாக்களையும் திரைப்படப் பிரதிகளை கைப்பற்றிச் சென்றிருப்பதாக ஈழ நாட்டில் செய்தி வந்தது. இரண்டு நாட்கள் தொடர்ச்சியாகப் பல்கலைக் கழக மாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடிய பின்னர்தான் நித்தியையும் நிரஞ்சனாவையும் விடுதலை செய்தார்கள். இனி திரைப்படக் கழகம் தொடர்ந்தும் இயங்கும் வாய்ப்புகள் அதிகம் இல்லையென்றே எல்லோரும் சொன்னார்கள். யாழ்ப்பாண நூலக எரிப்புப் போல வடகிழக்கு மாகாணம் முழுவதிலும் தமிழ் மக்களின் கலைஞானத்தின் மீது தொடுக்கப் பட்டுவருகிற யுத்தத்தின் ஒரு முனைதான் திரைப்படக் கழகம் மீதான தாக்குதல் என்று சிவலிங்கதாஸ் விரிவுரைகளின் போது சொன்னார். விஞ்ஞான பீட விரிவுரையாளர்களும் நித்தியும் நிரஞ்சனாவும் கைது செய்யப்பட்டதால் கோபமுற்றிருந்தார்கள். நித்தியும் நிரஞ்சனாவும் கைதுசெய்யப் பட்ட அன்று இரசாயனவியல் ஆய்வு கூடத்துக்குள் பேராசிரியர் மகேஸ் கோபத்தோடு நுழைந்தாராம். வகுப்பு ஆரம்பித்ததும் பொட்டாசியத்தை எடுத்து இரண்டு துண்டாக வெட்டியபடியே கண்ணாடிப் பாத்திரங்களைக் காட்டி சம்பந்தா சம்பந்தம் ஏதுமில்லாமல் இவை இரண்டும் இரண்டு மொடல்கள் என்றாராம். இந்தத் தண்ணீர் பாத்திரம் ஒற்றை ஆட்சியின் மாதிரி. அந்த மண்ணெண்ணைப் பாத்திரம் இணைப்பாட்சியின் மாதிரி.

உங்களைப் போன்ற தமிழ் மாணவர்கள் இந்தப் பொட்டாசியம் போல. நாங்கள் விஞ்ஞானிகள் பொட்டாசியத்தை மண்ணெண்ணையுள் வைத்தி

**'எண்ணை தீயை வளர்க்கும் தண்ணீர்தான் தீயை அணைக்கும்'**



# கோட்டாற்றங் கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ருக்கவே விரும்புகிறோம். விடமாட்டாங்கள் போல இருக்கு. சிங்களத் தலைவர்கள் தங் கள் புனித நூலான மகாவம்சத்தில் 'எண்ணை தீயை வளர்க்கும் தண்ணீர்தான் தீயை அணைக்கும்' என்று எழுதியிருக்கிறார்கள் ஆனபடியால் அதுதான் சரியென்று பிடிவா தம் பிடிக்கிறார்கள். அதனால் விஞ் ஞானிகளின் பேச்சை ஆபத்தானது, தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு ஆதரவானது என்று சொல்லுகிறார்கள். எங்கள் இரசாயன இயல் புத்தகங்களை யாழ் நூலகத்தோடு சேர்த்துக் கொழுத்திவிட்டு, மகாவம்சத்தை உயர்த்திப் பிடித்தபடி அமைதிக்கு வழி பொட்டாசியத்தை தண்ணீருக்குள் சேமிப்பதுதான் சரி என்கிறார்கள். இதுதான் இன்றைய நிலைமை என்றபடி பேராசிரியர் ஒரு துண்டு பொட்டாசியத்தை மண்ணெண்ணைக் கோப்பையிலும் மறு துண்டை தண்ணீரிலும் போட்டு விட்டு விலகிக் கொண்டாராம். தண்ணீர் பாத்திரத்தில் நடந்த வாண வேடிக்கையூடாக அவர் கொழுத்த நினைத்த விளக்கை மாணவர்களின் நெஞ்சாங்கூட்டுக்குள் கொழுத்தி விட்டார். மாணவர்கள் அந்த நிகழ்வை ஒரு நகைச் சுவைப் பிரசாரம் போலவே எங்கும்






**வரலாற்றுத் திரைப் படங்களைப் பார்த்ததால் பாலனுக்கு தன் முன் நிற்கிற 18 ஆம் நூற்றாண்டுப் போர்வீரர்க ளையும் போர்க் கருவிகளையும் அடையாளம் காண முடிந்தது.**

பரப்பினார்கள். பல்கலைக் கழகத்தை நினைக்கிற போது பாலனுக்கு தவிர்க்க முடியாமல் இப்படியான விசயங்கள்தான் ஞாபகத்தில் வருகிறது.

யாழ்ப்பாணம் திரைப்படக் கழகம் வெளியிட்ட வரலாற்றுத் திரைப் படங்களைப் பார்த்ததால் பாலனுக்கு தன் முன் நிற்கிற 18 ஆம் நூற்றாண்டுப் போர்வீரர்களையும் போர்க் கருவிகளையும் அடையாளம் காண முடிந்தது. யாழ்ப்பாணத்தில் குவாய் ஆற்றுப் பாலம், நீண்ட நாள், போன்ற ஆங்கிலப் போர்ப் படங்கள் எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களைப் போல அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓட ஆரம்பித்தது. கோபத்தோடு அரங்குக்கு வெளியே வந்த தமிழ் இளைஞர்கள் தங்கள் கற்பனைகளிலும் பகற் கனவுகளிலும் கொடுமை செய்யும் அரச படைகளையும் கிளின்ற் ஈஸ்றவூட்டின் பாணியில் போட்டுத் தள்ளிக் கொண்டும் விடுதலை இயக்கங்களுக்கு ஆட் சேர்ப்பவர்களைத் தேடிக் கொண்டும் திரிந்தார்கள்.

**தேடல் தொடரும்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேர்ணல் ஆர். ஹரிஹரன் (ஓய்வு)

# விரும்பாத போரின் வேண்டாத நினைவுகள்

**அக்டோபர் 3. 1987 அன்று இலங்கை கடற்படை புலேந்திரன். குமரப்பா உள்ளிட்ட 13 பேரை பருத்தித்துறை அருகே அவர்கள் தமிழகத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போது நடுக்கடலில் கைதுசெய்தது. அந்த இரண்டு தலைவர்களும் ஆயுதம் வைத்திருந்தார்கள்.**

பலாலியில் உள்ள இலங்கை ராணுவத் தலைமை முகாமில் அவர்கள் வைக்கப்பட்டனர். அவர்கள் சம்பந்தப்பட்ட பல கிரிமினல் வழக்குகளில் அவர்களை விசாரிப்பதற்காக கொழும்புக்கு கொண்டு செல்லவேண்டும் என்று ஜெயவர்த்தனா விரும்பினார். (அனுராதபுரத்தில் 139 யாத்திரிகர்களைக் கொன்ற தாக்குதலில் புலேந்திரன் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்). அமைதியான சூழ்நிலையைப் பாதுகாக்க அவர்களை விடுதலை செய்துவிட ஜெயவர்த்தனாவின் சம்மதத்தை இந்தியா கோரியது. ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருவேளை தான் சிங்களவர்களிடம் இழந்த செல்வாக்கை மீட்பதற்கான அரசியல் வாய்ப்பாக அவர் இதைப் பார்த்திருக்கலாம். எங்களுக்கு என்னவோ அவர் ஒருபோதும் அவர்களை உயிரோடு விடமாட்டார் என்றே தோன்றியது.

அக்டோபர் 5 அன்று இலங்கை ராணுவம் அவர்களை வலுக்கட்டாயமாக கொழும்புக்கு என்று வருகிறபோதெல்லாம் இந்தியாவில் கொழும்புக்கு என்றே பயன்படுத்துவார்கள். ஏற்றிச்செல்ல முடிவு செய்தது. அப்போது விமான தளத்தில் நான் இருந்தேன். இலங்கை ராணுவத்தின் யாழ்ப்பாண கமாண்டர்



மேஜர் ஜெனரல் ஜெயரட்ண என்னோடு இந்தியாவில் ராணுவப் பயிற்சி பெற்றபோது பரிச்சயமானவர். அவர் இந்திய ராணுவத்திடம் போராளிகளை ஒப்படைத்துவிட கடைசி நேரத்திலும் கொழும்புடன் முயற்சி செய்து பார்த்தார். ஆனால் அது பலிக்கவில்லை. அதிபர் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களைக் கொழும்பு கொண்டு செல்லத்தான் வேண்டும் என்று மனச்சோர்வுடன் கூறினார். என் அருகே இருந்த ஒரு இலங்கை ராணுவ அதிகாரி "கடவுளே... திரும்பவும் போர் தொடங்கப் போகிறது" என்றார்.

அப்போது போராளிகளை இலங்கைப் படையினர் இழுத்துக்கொண்டு வந்தபோது அவர்கள் சயனைட் குப்பிகளைக் கடித்ததைப் பார்த்தோம். முன்னதாக அவர்களை சந்தித்த மாத்தையா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்


ரகசியமாக சயனைட் குப்பிகளைக் கொடுத்திருந்தார். வாயில் நுரைதள்ளி இறந்து கொண்டிருந்த அவர்களை ஆம்புலன்சில் ஏற்றியபோது கை கால்கள் துடித்துக் கொண்டிருந்தன. இறந்து கொண்டிருந்தவர்களை சில படைவீரர்கள் கால்களால்



உதைத்தனர். இந்தச் சம்பவம் என் வாழ்வின் துயரகரமான சம்பவங்களில் ஒன்று. இரண்டு தலைவர்களின் ஈகோக்களை திருப்திப்படுத்துவதற்காக தேவையில்லாமல் அவர்கள் இறந்தனர். இத்தனைக்கும் சமாதானம் நெருங்கிய காலகட்டம் அது! எனது சகாவான கேப்டன் சந்தேக் அந்த நேரத்தில் கண்ணீர் விட்டார். இந்த சம்பவத்தில் இந்தியா உறுதியாகச் செயல்பட்டிருந்தால் புலிகள் போரைத் தொடுக்கும் கட்டத்துக்குச் சென்றிருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

மறுநாள் இலங்கைப் படையினர் 12 உடல்களை எங்களிடம் ஒப்படைத்தனர். (முதலுதவியால் மூன்று போராளிகள் பிழைத்திருந்தனர்.) உடல்களை பெற்றுச் செல்ல மூத்த புலித்தலைவர்களான மாத்தையாவும் யோகியும் வந்திருந்தனர். அச்சூழலில் இறுக்கம் நிலவியது. புலிகளின் சட்ட ஆலோசகரும் எனக்குத் தெரிந்தவருமான கோடீஸ்வரனும் வந்திருந்தார். இந்திய ராணுவத்தோடு போரில் இறங்க வேண்டாம் என்று பிரபாகரனிடம் ஆலோசனை கூறுமாறு அவரிடம் சொன்னேன். தமிழர்களுக்கு எதிராக நாங்கள் போராட விரும்பவில்லை. நாங்கள் அவர்களுக்கு உதவி செய்யவே வந்தோம். எங்கள் ராணுவம் மிகப்பெரியது.

அடுத்த 20 ஆண்டுகளுக்கு நாங்கள் போராட முடியும். நாகலாந்தில் 30 ஆண்டுகளாக போரிட்டுக் கொண்டிருக்கிறோம். பிரபாகரனுக்கு இதை உணர்த்துங்கள் என்றேன். சார் நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் தம்பியிடம் யார் சொல்வது? என்றார் அவர் வருத்தத்தோடு. மாத்தையா முகத்தில் சலனமில்லை. நீங்கள் இப்போது எங்களிடம் 12 பேராளிகளின் உடல்களைக் கொடுக்கிறீர்கள். உங்களிடம் உங்கள் படையினரின் 1200 உடல்களை நாங்கள் கொடுப்போம் என்றார் அவர். வெள்ளைத்துணியில் சுற்றப்பட்ட உடல்கள் புலிகளின் வேனில் ஏற்றப்பட்டன. மாத்தையாவின் கணிப்பு பலித்தது. நாம் புலிகளோடு நடத்திய போரில் 1255 வீரர்களை இழந்தேம். ஆனால் அவரால் தன் சாவைத்தான் கணிக்க முடியவில்லை. 'ரா' உளவாளி என்று கருதி பிற்காலத்தில் பிரபாகரன் தன்னைக் கொல்வார் என்று மாத்தையாவால் கணிக்க முடியாமல் போய்விட்டது! எனது நண்பரும் மென்மையாக பேசக்கூடியவருமான கோடீஸ்வரனும் அடையாளம் தெரியாத நபர்களால் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். என்ன ஒரு வேண்டாத இழப்பு!



மனித இனம் போரைப் போற்றியே வந்திருக்கிறது. இதிகாசங்களில் அவை பெருமைப் படுத்தப்பட்டிருக்கின்றன. நான் மூன்று பெரிய போர்களையும் குறைந்தது 10 உள்ளூர் தீவிரவாதிகளுடனான போர்களையும் இந்தியா வங்கதேசம் மற்றும் இலங்கையில் பார்த்திருக்கிறேன். உண்மையில் போர்கள் துயரமானவை. ஏனெனில் அவற்றில் மரணம் ஒவ்வொரு நாளும் நம்மைச் சந்திக்கிறது. ராணுவத்தில் நான் இருந்த 30 ஆண்டுகளில் எனக்குத் தெரிந்த எவ்வளவோ பேரை இழந்திருக்கிறேன். அவர்கள் பல ராணுவங்களையும் போராளிக் குழுக்களையும் சேர்ந்தவர்கள். தங்கள் கொள்கைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவர்கள் போராடி உயிரிழந்தனர். ஆனால் அதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? யோசித்துப் பார்க்கிறேன்.

மதுரையைச் சேர்ந்த ஒரு விதவைத் தாயின் ஒரே மகன் மேஜர் கேபால கிருஷ்ணர் இந்திய பாகிஸ்தான் போருக்கு சற்று முன்பாக சோவியத் யூனியனுக்கு சிறப்புப் பயிற்சிக்கு புறப்பட இருந்தார். போர் வந்துவிட்டதால் அவர் செல்லவில்லை. அடுத்தநாளே அதாவது போருக்கு இரண்டு நாட்கள் முன்பாக எல்லையில் நாங்கள் சிலர் சென்று கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த ஒற்றைக் குண்டுக்கு அவர் பலியாகிவிட்டார்.

திருகோணமலையில் ஒருமுறை புலிகள், எங்களை ஆதரித்துக் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவரான பத்மநாபாவைக் கொல்ல இரண்டு கொலையாளிகளை அனுப்பியிருப்பதாக தகவல் அறிந்தேன். அதிகாலை 3 மணிக்கு அவரை எழுப்பி தகவல் தெரிவித்தேன். பத்மநாபா அதைக் கேட்டு சிரித்தார். கேர்ணல் சார் இதற்கெல்லாம் என்னை எழுப்பாதீர்கள். இதை நினைத்து நீங்களும் தூக்கம் இழக்கவேண்டாம். நான் ஆயுதம் ஏந்திய அன்றே இறந்து போய்விட்டேன் என்று கூறிவிட்டு அவர் தூக்கத்தைத் தொடர்ந்தார். ஆனால் என்னால் தூங்கமுடியவில்லை. அப்போது அவர் உயிர் தப்பினார். என்றாலும் போர் முடிந்த பிறகு சென்னையில் அவரைப் புலிகள் கொன்று விட்டனர். போர்களில் மரணத்தை நானும் அருகே சந்தித்திருக்கிறேன். இலங்கையில் 1989 என்று நினைக்கிறேன், லெப்டினெண்ட் ஜெனரல் ஏ.எஸ். கல்கட்டுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நித்திகைக் குளம் என்ற இடத்தில் நமது படைகள் புலிகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த இடத்திற்கு ஹெலிகாப்டரில் சென்றோம். ஹெலிகாப்டரிலிருந்து இறங்கிய உடனேயே புலிகளின் ராக்கெட் ஒன்று தாக்கியது. ஹெலிகாப்டர் நெருப்புக் கோளமாக வெடித்தது.





நாங்கள் மயிரிழையில் பிழைத்தோம். அருகிலிருந்த ஏரிக்கரையைத் தாண்டி நாங்கள் பதுங்கிய போது இன்னொரு ராக்கெட் பாய்ந்து வந்து அருகில் நின்றுகொண்டிருந்த வேறொரு ஹெலிகாப்டரைத் தாக்கியது. எங்களுக்குப் பாதுகாப்பாக மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்த ஹெலிகாப்டர் புலிகளைத் திருப்பி தாக்கியது. ஆகவே நாங்கள் பிழைத்தோம். அன்றுதான் நான் போர்களை வெறுக்க ஆரம்பித்தேன். உயிர்ப் பயத்தால் அல்ல அவற்றுக்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்பதால். போர் தொடங்குவதற்கு முன்பே ஏன் கோபால கிருஷ்ணா ஒற்றை தோட்டாவுக்குப் பலியானார்? போரின் நடுவே ராக்கெட் தாக்குதலையும் மீறி எப்படி நாங்கள் உயிர் தப்பினோம்? என்னிடம் பதில்கள் இல்லை.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம்
சர்வானந்தா



## பி.எஸ். சரோஜா

திருவனந்தபுரத்தில் பிறந்து சென்னையில் படித்துக் கொண்டிருந்த சிறுமி பி.எஸ். சரோஜா, ஒரு பொதுக்கூட்ட மேடையில் 1939இல், ராஜாஜிக்கு முன்பாக சர்க்கஸ் வித்தைகளைக் காட்டினார். இது அந்தச் சிறுமிக்கு சினிமாப் பிரவேசத்துக்கு வித்திட்டது. இந்தச் சிறுமி மதன காமராஜன், கண்ணகி, குபேரகுசேலா, மங்கம்மாசபதம், மகாமாயா போன்ற படங்களில் சின்னச் சின்ன வேடங்களில் நடித்தார். 1944 இல் வெளிவந்த பர்மாராணியில் குடை டான்ஸ் ஆடி ரசிகர்களைக் கவர்ந்தார். கண்ணகி படத்தில் டான்ஸ் கற்றுக்கொடுத்த மாஸ்டர் போலோநாத்தை பி.எஸ். சரோஜா மணந்தார்.

இதன்பின்னர் பிரதான நடனக்காட்சியில் படங்களில் தோன்றி பலரது அபிமானத்தையும் பெற்றார் பி.எஸ். சரோஜா. ராஜாஜேஸ்வரி, நாட்டிய ராணி, மகாமாய போன்ற படங்களை இவருக்கு நல்ல பெயரைப் பெற்றுக்கொடுத்து. 1940ஆம் ஆண்டு இவர் கதாநாயகி அந்தஸ்துக்கு உயர்ந்தார். டைரக்டர் கே. சுப்பிரமணியம் விகடயோகி என்ற படத்தைத் தயாரித்தார், இதில் கதாநாயகி பி.எஸ். சரோஜா, கதாநாயகன் பி.யூ. சின்னப்பா. இதனைத் தொடர்ந்து கதாநாயகி வேடத்தில் பல படங்களில் நடித்தார் பி.எஸ். சரோஜா. தன அமராவதி, 1947 இல் வெளிவந்த இன்பவல்லி, கீதகாந்தி 1949 இல் வெளிவந்த தேவமனோகரி, 1950 இல் பாரிஜாதம், 1951 இல் வெளிவந்த ஜீவித நைளகா, ஓர் இரவு என்பவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை. பி.எஸ். சரோஜாவுடன் நடித்த கதாநாயகர்களில் எம். எஸ். குமரேசன், டி.ஆர். மகாலிங்கம், ஹொன்னப்ப பாஹவதர், திக்குரிச்சி சுகமாரன் நாயர், டி.கே. சண்முகம் ஆகியோர் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள்.




பிரபலமாக இருந்த வேளையில் அவரது வாழ்வில் துன்பகரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. சேலத்துக்கு அருகே ஒரு நாள் நள்ளிரவு இடம் பெற்ற கார் விபத்தில் கணவர் போலோநாத், மகள் ராணி, சாரதி ஆகியோர் சம்பவ இடத்திலேயே மரணமானார்கள். சோகத்தில் ஆழ்ந்து போனார், பி.எஸ் சரோஜா. கால ஓட்டம் கவலையைக் குறைத்தது, தொடர்ந்து நடித்து தன் கவலையை மறக்க முயன்றார். 1952 இல் தியாகராஜபாகவதருடன் இணைந்து அமரகவிபடத்தில் மீண்டும் நடிக்க ஆரம்பித்தார். அவரது மீள் திரைப்பிரவேசம் சிறப்பாக அமைந்தது. திரைப்படங்கள் தொடர்ந்து வரலாயின. வாழப்பிறந்தவள், ஜெமினிகணேசனுடன் ஆசை மகன், 1953 எம்.ஜி.ராமச்சந்திரனுடன் ஜெனோவா, ஏ.பி: நாகராஜனுடன் இணைந்து 'மாங்கல்யம்' என்பன வெளிவந்தன. பி.எஸ். சரோஜாவை குணசித்திர நடிகையாக உயர்த்திய







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனைவியான பின்னரும் மங்களாவை வட்டமிட்டுக் கொண்டேயிருந்தான் ஜீவா. இதுவே படத்தின் கதைச்சுருக்கம். படத்தில் மங்களாவாக பி.எஸ். சரோஜாவும், ஜீவாவாக - சிவாஜியும் தங்கராஜாவாக - எம்.ஜி.ஆரும் நடித்திருந்தனர். பி.எஸ். சரோஜா நடித்து 1959 இல் மொடேர்ண் தியேட்டர்ஸ் தயாரிப்பில் வெளிவந்த படம் வண்ணக்கிளி. இதன்பின்னர் பி.எஸ். சரோஜா நடித்து 1961 இல் வெளிவந்த படம் குமுதம். இதில் இவர் துணை நட்சத்திரமாகவே தோன்றினார். இதன் பின்னர் இவர் திரையுலகில் இருந்து ஒதுக்கிக் கொண்டார்.

படம் 1954இல் வெளிவந்த கூண்டுக்கிளி. மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரனும், நடிகர்திலகம் சிவாஜிகணேசனும் இணைந்து நடித்த ஒரே படம் கூண்டுக்கிளி, இப்படத்தின் டைரக்டர் T.R. ராமண்ணா. இத்திரைப்படம் சிறப்பாக ஓடவில்லையென்றாலும் திரையுலக வரலாற்றில் பேசப்பட்டு வருகின்ற காவியமாக இருக்கிறது. புதுமை எழுத்தாளர் விந்தன் கூண்டுக்கிளிக்கு கதை வசனம் எழுதியிருந்தார்.

மங்களாவை ஜீவா நேசித்தான், ஆனால் தங்கராஜ்தான் மணந்தான். தங்கராஜின் இணைபிரியா நண்பன் ஜீவா. நண்பனின்




# சூரிய நமஸ்காரம்

ஒளிக் குருதி வீச்சோடு
எழுகின்ற சூரியனே பார்
இரத்தப்பிடிப்பின்றி சோகையுற்றோம்
உன்குருதியை எமக்குள் பாய்ச்சு

குந்திபெற்ற புத்திரனைப் போல
எம்மைத் தள்ளி விடாதே
சொல்
பேர் சொல்லியழைக்கவும்
பிள்ளைகளற்றுப் போவாளா எம் தாய்?

தன் உதிரக் கனிகளின்
ஊர் கொள்ளா விளைச்சல்
வீடுவந்து சேர்கவென
ஓயாது புலம்புகிறாள்

கூவிக்கூவி பறவையினங்களும்
அலையும் அவள் குரல்
உனது கதிர்களில் ஊடறுத்து
அதிரவில்லையா?

ஒளிக்கனி நாடி
சிறகடித்த பறவைகளின் சங்கீதத்தை
எரிந்த சாம்பரினின்றும் மீட்டுத் தா
இருள் படிந்த புதைவுகளினின்றும்
புதிய குருதிப் பொலிவோடு
இவள் பிள்ளைகளை எழுப்பித் தா

வீரியரின் பூமியாக இது விளங்கட்டும்

சோகையுற்ற வாழ் நிலத்திலும்
சுதந்திரம் வரண்ட தேசத்திலும்
வலம்வருதல் உனக்கு வெட்கமாயிருந்தால்
ஒளிநிறை வாழ்வின்
உன்னதத்தை எமக்குத் தா!

கவிஞர் சு. வில்வரத்தினம்
நன்றி - காலத்துயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு



ஆட்டம்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




colombo 12. Tel : 0112 478444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org